சிவாஜி

இல்லறமும் இல்லமும்

"இல்லறமல்லது நல்லறமன்று" என்று சொல்வார்கள். நியாயமென்று நாம் ஒப்புக்கொள்ளத் தடையில்லை. ஆனால் இல்லறம் வளர்க்க இல்லம் வேண்டாமா? அது தான் இப்போது தட்டுப்பாடாயிருக்கிறது. 'இல்லம் வளர்ப்போம், அறம் வளர்ப்போம்' என்ற கோஷத்துடன் உலகம் இன்று சிக்கனமான வீடுகளைக் கட்டும் பணியில் முனைந்திருக்கிறது. இந்தியாவிலும் "ரேடிமேட்" வீடுகள் கட்டும்யோசனை இருந்து வருகிறது. மேலே படத்தில் இந்த "ரேடிமேட் வீடு" ஒன்றில் இல்லாள் ஒருத்தி காட்சியளிக்கிறாள் பக்கத்திலுள்ள கட்டுரை அனுபவக்குறிப்பாக அமைந்துள்ளது. படித்துப் பாருங்கள்.

இல்லறத்துக்கேற்ற இல்லம்

சிக்கனமும் சிறப்பும்

இந்தியாவிலும் 'ரேடிமேட்' வீடுகள் கூடிய சீக்கிரத்தில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன. இவ்வீடுகளைத்தயாரிக்கும் தொழிற்சாலைகளை புது டில்லியிலும் மற்றும் பல நகரங்களிலும் நிறுவுவதற்கான திட்டங்கள் தயாராகிவிட்டன. ஆனால் இவ் வீடுகள் நம் நாட்டு மக்களுக்கு புதிது. ஆகவே ரேடிமேட் வீட்டில் வாழ்க்கை எப்படி இருக்குமென்பதை அறிய சகலரும், முக்கியமாக பெண்கள் ஆவல் கொள்ளுவது இயற்கையே.

மாஜி கடற்படை அதிகாரியான மிஸ்டர் டேட் அருண்டேல் தன் அனுபவங்களை இக்கட்டுரையில் விவரிக்கிறார்.

முதலில் எனக்கென ஒரு 'ரெடிமேட்' வீடு ஒதுக்கப்பட்டபோது எனக்கோ அல்லது என் மனைவிக்கோ அதில் வசிக்கவேண்டுமென்ற விருப்பம் ஏற்படவில்லை. ஆனால் யுத்தத்தின் போது அநேக கட்டிடங்கள் குண்டுவீச்சுக்கு இலக்கானதால் வீடு கிடைப்பதென்பது இங்கிலாந்தில் குதிரைக்கொம்பாக இருந்தது. அநேக குடும்பஸ்தர்கள் என்னைப்போல பல அசௌகரியங்களுக்கிடையில் தங்களுடைய சிநேகிதர்கள் அல்லது பந்துக்களின் வீடுகளில் வசிக்க வேண்டியிருந்தது. ஆகவே ஏதோ ஒரு ரெடிமேட் வீடு கிடைத்ததே என்ற சந்தோஷமும் எங்களுக்கு ஒரு புறமிருந்தது. இந்த ரெடிமேட் வீடுகூட எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதல்ல. சில உரிமைகளின் காரணமாக சீக்கிரத்திலேயே எங்களுக்கு ஒரு வீடு ஒதுக்கப்பட்டது.

எங்களுக்கென ஒரு 'ரெடிமேட்' வீடு தயாராக இருப்பதாகவும் அதை நாங்கள் சென்று பார்வையிடலாமென்றும் ஒரு கடிதம் வந்தபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என் மனைவியும் இரு பெண்களும் வெளியில் சென்றிருந்ததால் நான் தனியாகவே வீட்டைச் சென்று பார்க்க வேண்டியதாயிற்று. ரெடிமேட் வீடுகள் தற்காலிகமாகத்தான் வசிக்க லாயக்கானவையென நான் கேள்விப்பட்டிருந்ததால் அதைச் சென்று பார்ப்பதில் எனக்கு அவ்வளவாக ஆர்வமும் ஏற்படவில்லை.

இருந்தபோதிலும் சாவியை எடுத்துக்கொண்டு அரைமனதுடன் ரெடிமேட் வீடுகள் உள்ள காலனிக்குச்சென்றேன். எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 46-ம் நம்பர் இல்லம் வெளிப்பார்வைக்கு வெகு அழகாகவும் சுத்தமாகவும் தென்பட்டது. ஒவ்வொரு வீட்டைச்சுற்றிலும் ஒரு கஜ அகலத்திற்கு காங்கிரீட் தளம் போடப்பட்டிருந்தது. பூச்செடிகள் வைக்கவும் கறிகாய் தோட்டங்கள் போடுவதற்கும் இச்சையுள்ளவர்களுக்காக வீட்டின் முன்பக்கத்திலும் பின் புறத்திலும் நிறைய காலி இடம் விடப்பட்டிருந்தது.

இந்த வீட்டில் மூன்று அறைகளும் ஒரு சமையலறையும் ஒரு முதல்தரமான ஸ்நான அறையும இருக்கின்றன. 14 அடி நீளமும் 12 அடி அகலமுமுள்ள இரு படுக்கையறைகளும், துணிமணிகள், பெட்டிகள் வைப்பதற்காக இருக்கின்றன. ஆகவே இவ்வறைகளுக்குத் தேவையான இதர சாமான்கள் படுக்கையும் நாற்காலியும்தான் என எனக்குத் தோன்றிற்று.

மற்றொரு அறையிலும்—இதுதான் வீட்டின் ஹால்—சுவரிலேயே அலமாரிகள் பதிக்கப்பட்டிருந்தன. சகலவிதமான காரியங்களுக்கும் பயன்படக்கூடிய இவ்வளவு அலமாரிகளும் பீரோக்களும் உள்ள வீட்டில நாங்கள் இதுவரை வசித்ததே இல்லை. மரச்சாமான்களும் மற்ற பொருள்களும் யானைவிலைக்கு விற்கப்படும் இவ்வூரில் இவ்வளவு அழகாக திட்டமிடப்பட்ட வீடு கிடைப்பதென்றால் அது தேவதை அளித்த வரப்பிரசாதமென்றே நாங்கள் கருதுகிறோம்.

இவ்வளவு நன்மைகளிருந்த போதிலும் எனது மனைவிமக்களைக் கலந்து ஆலோசியாமல் இவ் வீட்டில் குடியேற ஒப்புக்கொண்டால் என்ன சொல்வார்களோ என்ற பயமும் எனக்கு ஒருபுறத்தில் இருந்தது. சமையலறைக்குள் சென்று சுற்றிப்பார்த்தேன். ஆஹா! மனைவியிடம் சென்று அதை எப்படி வர்ணிப்பது என்று எனககுப் புரியவில்லை. சுவரில் எதிருக்கெதிராக அழகான ஜன்னல்கள், ஒரு பெஞ்ச், மின்சார ஸ்டவ், ஒரு ரெப்ரிஜிரேட்டர் சமையலடுப்பு சகலமும் வைககப்பட்டிருந்தன. இவைகளைத் தவிர சமையல் பாத்திரங்கள், டப்பாக்கள், கண்ணாடிக் குப்பிகள், தட்டுகள், ஜாடிகள் முதலியவைகள் வைப்பதற்கென விசாலமான அலமாரிகளும் பொருத்தப்பட்டிருந்தன. இவைகளை விட வேறு என்ன சவுகரியங்கள் வேண்டும்?

நாங்கள் இந்த ரெடிமேட் வீட்டில் குடியேறி தற்போது 18 மாதங்கள் ஆகிவிட்டது. என் மனைவிக்கும் பெண்களுக்கும் வீடு ரொம்ப பிடித்துவிட்டது. வீட்டைச்சுற்றி நாங்கள் பூச்செடிகளும், காய்கறிதோட்டமும் போட்டிருக்கிறோம். பழய நாள் மோஸ்தரில் கட்டப்படும் சௌகரியக் குறைவான வீடுகளில் வசிப்பதைக்காட்டிலும் இந்த 'ரெடிமேட்' வீடுதான் எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. — "லண்டன் காலிங்"

13-3-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

கல்யாண் நகரைக் கைப்பற்றி பொக்கிஷம் சுமந்து சென்ற கூட்டத்தைச் சூறையாடிய சிவாஜி முன் சமயங்களில் போல் ஏதாவது சமாதானம்கூற முயன்றானா? இல்லை. ஒரே ஆயுதத்தை எத்தனை தடவை பிரயோகிக்க முடியும்? ஒரே சால்ஜாப்பை எத்தனை முறை திருப்பிச் சொல்ல முடியும்? எனவே சிவாஜி இந்தத்தடவை தனது வழக்கமான சமாதானங்களைக் கொண்டு பீஜபுரி சுல்தானைச் சமாதானப்படுத்த விழையவில்லை. அவன் இதற்கு வேறு திட்டம் வைத்திருந்தான்.

ஃ ஃ ஃ

தக்க காவலோடு கண்ணியமாக அனுப்பப்பட்ட மாஜி அதிகாரி முலானா அகம்மது பீஜபுரிக்கு பத்திரமாகவே வந்து சேர்ந்தான். பீஜபுரி நெருங்கும்போது அவனுக்கு இருந்த படபடப்பும், அவமானமும் சொல்லத்தரமன்று. எந்த முகத்தை வைத்துக்கொண்டு சுல்தானது பிரதான நகரத்துக்குள் நுழைவது அவன்! வெட்கிப்போனான். சுல்தானைப் பார்க்கச் செல்லுமுன் அவன் தன்னை—தன் மனத்தை—தயாரித்துக் கொண்டது வேடிக்கையான விஷயம். பல நண்பர்களுடன் ரகசியமாகக் கலந்தாலோசித்தான். சுல்தானுக்கு அந்தரங்கமான சிலரைக் கூப்பிட்டு அவரது மன நிலை எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ளத் துடித்தான்.

கடைசியில் சுல்தான் காலில் விழுந்து சரணாகதியாகித்தலைக்கு வந்த வினைபற்றிக் கதறிவிடுவது என்று முடிவு செய்தான்.

மாட்சிமை தங்கிய மாஜி அதிகாரி முலானா அகம்மது சுல்தான் முன்னே, மகத்தான அவையின் சாட்சியில், துக்கம் கொண்டாடும் துல்லிய ஆடை அணிந்து, சோகமே உருவெனத் துவண்டு நின்றான். அவன் நடித்த நாடகம் அந்தக் காலத்து அரசவை நாடகங்களுக்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு.

தலையில் சுற்றியிருந்த உருமாலைக் கழற்றி சிங்காதனத்தின் முன்னர் வைத்துவிட்டுத் தலை குனிந்து நின்று, உள்ளங்கைகளால்வாயிலடித்துக்கொண்டே அந்த “அயோக்கிய சிவாஜி”யைப்பழிவாங்கவேண்டுமென்று சிபாரிசு செய்தான் முலானா அகம்மது.

தர்பார் முழுவதும்ஒருபெரிய கலகலப்பு ஏற்பட்டது. சிவாஜி....மறுபடியும் சிவாஜி! சுல்தானது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

சாதாரணமாக இத்தகைய சந்தர்ப்பங்களில் சுல்தானின் கோபம் முறையிடுவோர்மேல்தான் திரும்புவது வழக்கம். அவன் அதிர்ஷ்டம் ... முலானா

சரித்திரத் தொடர்

“ராணா”

பதினைந்தாம் அத்தியாயம்

பழியோரிடம் பாவமோரிடம்

அகம்மது அன்று சுல்தானது கோபத்துக்கு ஆளாகவில்லை.

ஆனாலும் சுல்தானது கண்களில் கடுமையான ஒரு அருவருப்பு பளிச்சிட்டுக்கொண்டிருந்தது. முலானா அதை எதிர்நோக்க முடியாமல் தலையைக் குனிந்து நின்றான்.

“சிவாஜி...சிவாஜி.... இவன் தொல்லை வளர்ந்து வருகிறதே” என்று முனகிக்கொண்டே தர்பாரை ஒருவாறு கலைத்துவிட்டுத் தன் காரியஸ்தனுடன் தனியறைக்குச் சென்றார் சுல்தான்.

சிவாஜியின் பழைய செயல்களில் கவனிக்கத்தக்க பொருள் ஏதும் இல்லையென்று அலட்சியப்படுத்தி வந்த சுல்தானுக்கு இந்தப் புதிய சம்பவம் அதிர்ச்சியுண்டாக்கியது. சிவாஜியை கவனித்து அடக்காவிட்டால் அவனது தொந்தரவு பயங்கரமாக வளர்ந்துவிடும் என்றகவலை முளைவிட்டு எழுந்தது.

சிவாஜியை உடனடியாக பீஜபுரி தர்பாருக்கு முன் ஆஜராகும்படி உத்திரவு எழுதி ஓலையனுப்பச் சொன்னார் சுல்தான். காரியஸ்தன் முத்திரையிட்ட ஓலையனுப்பினான் சிவாஜிக்கு. குதிரையேறித் தனியொரு தூதன் சிவாஜியின் திசைநோக்கிச் சென்றான்.

தூதனை அனுப்பியவுடன் காரியஸ்தனுக்கு நினைவு வந்தது. வேறொன்றுமில்லை—சிவாஜியின் தந்தை ஷாஹாஜி, சுல்தானது ஊழியத்தில்தான் இருந்தார் என்பதை ஞாபகப்படுத்தினான் சுல்தானுக்கு.

“ஆமாம், ஆமாம்” என்று கொண்டே அவர் ஒருமுறை ஆத்திரமாக எழுந்து உட்கார்ந்தார்.

“உடனே வரச்சொல்லி ஷாஹாஜிக்கு ஆளனுப்பு!” என்று காரியஸ்தனுக்கு உத்திரவிட்டார்.

ஷாஹாஜிக்கு சகுன ஊகம் நேர்ந்ததில் வியப்பில்லை. எதற்காகத் தன்னை இவ்வளவு அவசரமாக சுல்தான் அழைக்கவேண்டும்? மதுபடியும் ஏதாவது சிவாஜி சம்மந்தமான தவறாக இருக்குமோ?

முந்தைய நடவடிக்கைகளைப் பற்றித் தம்மை சுல்தான் யாதொன்றும் கேட்காதது நினைவுக்கு வந்தது. சிவாஜியின் பழைய “அதிக்ரமங்கள்” பற்றி அவருக்கு நன்றாகத்தெரியும். உண்மையில் தமது அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகத் தமது தனயனது கட்சியை ஸ்தாபிக்க மறைமுகமான பல வேலைகள் அவர் செய்ததுண்டு.

கவலையேற்பட்டது.சிவாஜியின் மேல் தாங்க முடியாத கோபமும் வந்தது.

நேரே சுல்தானைப் பார்க்க விரைந்து சென்றார். சுல்தான் அமர்ந்திருந்த அறைக்குள் நுழைந்தபோது தம் இருதயம் படபடவென அடித்துக்கொள்வதற்கேற்றாற்போல் சுல்தானது முகவிலாசமும் இருப்பதைக் கண்டு பயம் அதிகமாயிற்று ஷாஹாஜிக்கு.

மண்டியிட்டு வணங்கிவிட்டுப் பக்கத்திலிருந்த ஆஸனத்தில் அமர்ந்தார். காரியஸ்தன் வெளியே போய்விட்டான்.

சுல்தான் சீறி எழுந்தார்.

“வரவரத் தொந்தரவு அதிகமாகிறது. அக்கிரமம் விரிவாகி வருகிறது...” என்று உரத்த குரலில் கூவினார்.

ஷாஹாஜி நடு நடுங்கிப்போய் விட்டார்.

“யாருடைய அக்கிரமம், சுல்தான்...” என்று மெல்லிய குரலில் கேட்டார்.

“வேறுயார்.... அந்தப் பொடிப் பயல் சிவாஜியின் அக்கிரமம் தான்....திருடன்...நீர் அவனுக்குத் தந்தை...”

“அவன்தான் அடங்கி ஒழுங்காக வழிக்கு வந்து...”

“உளறலை நிறுத்தும்.கல்யாண் சம்பவம் நேர்ந்த பின்னருமா இப்படிக்கூறுகிறீர்....”

“என்ன நடந்துவிட்டது, சுல்தான்?”

“கல்யாணைப் பிடித்துக் கொண்டு, அங்கிருந்து வந்து கொண்டிருந்த பொக்கிஷத்தைக் கொள்ளையடித்து முலானா அகம்மதைத்துரத்திவிட்டான். அந்தப் பேடிப்பயல் இங்கு வந்து கதறுகிறான்...”

ஷாஹாஜிக்கு குப்பென்று வியர்த்தது. அவர் அன்றைய தர்பாருக்குப் போகவில்லை அது தான் விஷயம் விளங்க சுல்தானின் விளக்கம் தேவையாயிருந்தது.

“எனக்கொன்றும் தெரியாது, சுல்தான். அந்த அயோக்கியச் சிறுபயல் அடங்கிப்போய்விட்டான் என்றல்லவோ இருந்தேன்...”

“ஒன்று மறியாதவர் போல ஏதேதோ பிதற்றுகிறீரே... ஐயோ! பாவம்...உமது சூழ்ச்சிகள் எனக்குத் தெரியாதா?”

“ஐயையோ! நான் ஏது பாவமும் அறியேன் சுல்தான். நான் அவன் விஷயத்தில் ஏது கவனமும் காட்டுவதில்லை. அவனைத் தலைமுழுகி எத்தனை காலமாயிற்றே....”

“பிள்ளையின் செயல்கள் அப்பனுக்குத் தெரியாதா? என்னை நம்பச் சொல்கிறீர்...! யாரை ஏமாற்றப்பார்க்கிறீர்?”

“அவனை நான் கண்காணாத இடத்துக்குத் துரத்தி விடவில்லையா? அவன்பேரில் ஏது நடவடிக்கை எடுப்பதற்கும் நான் குறுக்கே நிற்கவில்லை. உடனே ஒரு சேனையை அனுப்பி அவனைக்கைது செய்ய உத்தரவிடுங்கள், சுல்தான்...”

“ஹா....ஹா...ஹா... ”—சுல்தான் பலதத எக்களிப்புடன்சிரித்தார்.

“அயோக்கியப்பயல் ... அவனுக்கு மூளை கிறங்கிப்போயிருக்கவேண்டும்” என்று முனகினார் ஷாஹாஜி.

சுல்தானுக்கு ஷாஹாஜியின் மேல் சந்தேகம் வலுத்ததேயொழியக் கோபம் அடங்கவில்லை. தன்னை ஏமாற்ற முயற்சிப்பதாகவே ஷாஹாஜியைச் சந்தேகித்தார் சுல்தான். கோபம் ஆவேசமாக வளர்ந்தது.

தடாலென்று எழுந்திருந்து முன்னே தொங்கிய கயிற்றைப் பிடித்திழுத்து மணியடித்தார். இரண்டு சேவகர்கள் ஓடி வந்து நின்றார்கள்.

ஷாஹாஜி நடுங்கினார். “நான் ஏது பாவமும் அறியேன், சுல்தான். நான் குற்றமற்றவன்...” என்று கதறிக்கொண்டே முறையிட்டார்.

“இவரை உடனே கைது செய்து சிறைப்படுத்துங்கள்” என்று கூவினார் சுல்தான்.

பிரபு ஷாஹாஜியின்மேல் சேவகர்களது வலிவான கைகள் விழுந்தன. (தொடரும்)

“டைப் ரைட்டிங்”

அ. இ. “டைப்ரைட்டிங்” போட்டி மேற்பார்வைக் கமிட்டியின் திருச்சி அங்கத்தினரான திரு. பாலகிருஷ்ணன் எழுதுகிறார்:- “சென்ற டிஸம்பரில் நடந்த அ. இ. டைப் ரைட்டிங் போட்டியில், திரு. ஆர். நடராஜன் ஒருவரே திருச்சியில் சிறப்புப்பத்திரம் பெற்றவரென்றும், அகில இந்தியாவிலும் நான்காவது ஸ்தானமும், தவறின்மைக்காகப் பாராட்டுதலும் பெற்றாரென்றும் அ. இ. இந்திய கழகத்திலிருந்துதகவல்கிடைத்துள்ளது”

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது
வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள் & விக்டரி ஸ்டார் வைரங்கள்
தயாரிப்பவர்:— **சென்னி ராதாகிருஷ்ணன்,** பெரியபஜார், திருச்சிராப்பள்ளி.

விஞ்ஞான மகிமை

இந்தியர்களுக்கு விஞ்ஞான வேலை செய்யும் திறமை இருக்கிறது. இருந்தாலும் உண்மை விஞ்ஞான வேலை இந்தியாவிலேயே ஒரு இடத்திலும் நடைபெறவில்லை. இந்தியாவிலுள்ள மக்கள் விஞ்ஞானத்தின் மதிப்பை உணர்ந்துகொள்ளவில்லை. விஞ்ஞானம் அறிவு அறிவு சக்தியாகும். சக்தி ஒன்றுதான் சர்க்காருக்கு பலமளிக்க முடியும். — சி. வி. ராமன்

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை 14	திருச்சி, 13—3—49 சர்வதாரி-ளு மாசி-மீ, 30-உ	முற்றுகை 24

உண்மைக் கல்வி

உண்மைக்கல்வி உள்ளத்தை ஒளிவிட்டு பிரகாசிக்கச் செய்கிறது. ஆத்மாவின் அந்தகாரத்தை விரட்டியடிக்கிறது. வாழ்க்கையின் தளைகளிலிருந்து ஆத்மாவை மீட்டு இறைவனின் பாதங்களை அடைய வழிகாட்டுகிறது. நம் கோயில்கள் மேற்சொன்ன லட்சியத்துடன் இயங்கின.

— பிரதமர் ரெட்டியார்

மாகாண அரசாங்கமும் தொழிற்கல்வியும்

ஜி. டி. நாயுடுவின் கசப்பான அனுபவம்

பரீட்சைக்கு இடமாற்றம் நேர்மையானதா?

நம் நாட்டின் தொழிற்கல்வித் துறையில் கோவை ஜி. டி. நாயுடு அவர்களுக்கு ஒரு மகத்தான ஸ்தானம் உண்டு என்பதை நாடு இன்று உணரவில்லையானாலும் சரித்திரம் பொன்னெழுத்துக்களில் கூறும் என்பதில் சந்தேகமில்லை.

பீளமேடு ஆர்தர்ஹோப் தொழிற் கல்விக் கலாசாலை நாயுடுவின் ஊக்கத்தால் உருவாகிப் பல சங்கடங்களிடையேயும் திறம்பட நடத்தப்பட்டுவரும் நிலையங்களில் ஒன்று. இக்கலாசாலை 1945-ம் ஆண்டில் ஜுலை மாதத்தில் சென்னை மாகாண அரசாங்கத்தின் யுத்த பிற்கால புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. கலாசாலைக்கட்டிடம் நாயுடு அவர்களால் இலவசமாக அளிக்கப்பட்டது என்பதுடன் மேலும் இரண்டு லக்ஷம் ரூபாய் அன்னாரால் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

தற்போது ஸிவில், மின்சாரத் துறைகளில் தொழிற் கல்வி (என்ஜினீரிங்) கற்பிக்கப்பட்டு வருகிறது. மற்றுமுள்ள எல்லாத் துறைத் தொழிற் கல்வியும் கற்பிக்க வேண்டுமென்பது லட்சியம். கலாசாலையை யொட்டி ஹாஸ்டல், மகத்தானதொரு வாசகசாலை, கழகம், ஆஸ்பத்திரி ஆகிய அனைத்தும் இயங்குகின்றன.

கலாசாரத்துறையிலும், உபரி அறிவுத் துறையிலும் இக்கலாசாலையின் நடவடிக்கைகள் மெச்சத் தக்கதாயிருக்கின்றன ஹிந்தி வகுப்புகள், முக்கியமான பொருள்கள் பற்றி மாணவர் விவாதங்கள், கூட்டுறவு முயற்சி ஆகியவை சிறப்புடையன. தலைமைப் போராசிரியர் விஸ்வநாதமவர்களது முயற்சிகள் இத்தகைய ஈடுபாடுகளுக்குக் காரணமாயிருந்தாலும், நாயுடு அவர்கள் திட்டத்துக்கேற்ப வளர்ச்சி யடைவதற்கு, அரசாங்கத்தின் கவனமின்மையாலும் அலட்சியத்தாலும், இடமின்றித்தேக்கமடைந்திருக்கிறது. இந்தத் தேக்கம் குறித்து நாயுடு அவர்களின் துயரம் சொல்லத்தக்கதன்று.

சென்ற பிப்ரவரி மாதம் 25-ம் தேதியன்று இக்கலாசாலை தினம் கொண்டாடப்பட்டது. திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீமதி ஸ்ரீனிவாசன் மாணவருக்கு பரிசுகள் வழங்கினர். தலைமைப் பேராசிரியர் திரு. ஏ. விஸ்வநாதம் அறிக்கை சமர்ப்பித்தார்.

ஃ ஃ ஃ

நாயுடு அவர்களது பிரசங்கங்களுக்கு ஒருதனிச்சிறப்புஉண்டு. பிரமுகர்களுக்கு அளிக்கும் தேநீர் விருந்துகளானாலும்சரி, தொழிற்துறை மகாநாடாயிருந்தாலும்சரி, கல்விபற்றிய கூட்டமாயிருந்தாலும்சரி தமது பிரசங்கத்தை வெறும் உபசாரமாக விட்டுவிடமாட்டார் தமது கருத்துகளைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் அறிவித்து, குற்றங்களை வெளிப்படையாக எடுத்துக் காட்டி, கண்டிக்கத்தக்கவிஷயங்களைக் கடுமையாகக் கண்டித்து, ஆக்கவேலைக்கான சிந்தனையைத் தூண்டுவதிலேயே முனைவார்.

திரு. நாயுடு அவர்கள் பீளமேடு கலாசாலை விழாவில் ஆற்றிய தலைமைச் சொற்பெருக்கு மாணவருக்கு அரிய உபதேச மாயமைந்திருப்பதுடன், சிந்தனையைத் தூண்டுவதாயிருக்கிறது.

அரசாங்க மனப்பான்மை

ஆர்தர் ஹோப் கலாசாலை விஷயத்திலும், பொதுவாக மாகாண தொழில் நுணுக்கக் கல்வித்துறையிலும் தாம் ஈடுபடுத்திய அக்கரைக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்விதமான எதிரொலியுமே இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்திருக்கிறார் ஜி. டி. நாயுடு. அவர் கூறுகிறார்:—

"கலாசாலையைத்துவக்குவதற்குத் தேவையான எல்லா ஆரம்ப சாதனங்களையும், கருவிகளையும்கொடுத்ததுடன், இரண்டு லட்சம் ரூபாய் பணமும்கொடுத்தேன். மற்ற என்ஜினீரிங் கல்வியுடன், இந்தியாவில எங்கும் இல்லாத ஆடோமொபைல் என்ஜினீரிங் டிகிரி வகுப்புகளும் துவக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தைவேண்டிக்கொண்டேன். என்னிடமிருந்து அரசாங்கம் எல்லாவிதமான உதவியையும்பெற்றுக்கொண்டும்கூட, என்னுடைய வேண்டுகோளையாவது தனது வாக்குத்தத்தங்களையாவது அது நிறைவேற்றவேயில்லை. ஆடொமொபைல் என்ஜினீரிங் ஆரம்பிக்கவேண்டுமென்பதே முதல் நிபந்தனையாகப் பேசப்பட்டது, ஆரம்ப காலத்தில்."

தாம் இக்கலாசாலையில் ஒரு ஸ்தானம் வேண்டியபோது கிடைத்த எதிரொலிபற்றிக்குறிப்பிடுகிறார்:—

"எனக்கு இந்தக் கலாசாலையில் ஒரு ஸ்தானம் வேண்டுமென்று நான் மனுக்கொடுத்தபோது எனக்கு அதிக வயதாகிவிட்டதென்றும், நான் பள்ளிக் கல்வி பயிலவேயில்லையென்றும் அரசாங்கத்தார் கூறிவிட்டார்கள். ஆடொமொபைல் கல்வியில் எனக்கு வெளிநாட்டுப்பயிற்சியும் டிப்ளோமாக்களும்இருந்ததால் கலாசாலையில் ஆடோமொபைல் என்ஜினீரிங் ஆசிரியர் அல்லது டெமான்ஸ்டிரேடர் பதவி கொடுங்கள் என்று கேட்டபோது ஆடொமொபைல் வகுப்பே இல்லாததால் இந்தப் பிரச்னையே எழவில்லை என்று பதில் கூறினர்கள்.

"மேலும், பூர்ணமான சாதனங்களுடன் ஒரு கட்டிடம் கொடுக்கிறேன், எனக்கு 50000 டாலர் பணமாற்றுக் கொடுங்கள் என்று கேட்டபோதும் அரசாங்கம் கவனிக்கவேயில்லை. இந்தக் கட்டிடத்துக்கு ஏதோ ஒரு வாடகை மதிப்பிட்டுக் கொடுத்து அந்தத் தொகையிலிருந்து தகுதியுள்ள ஏழை மாணவருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கலாமென்று கூறியபோதும் இப்படியேயாயிற்று.

"பெருமுயற்சிகொண்டு இந்தப் பக்கத்தில் ஆயிரம் ஏகரா நிலம் வாங்கி இந்தக் கலாசாலை பாலிடெக்னிக் ஒரு தேசிய பரிசோதனைச் சாலை ஆகியவற்றை நிறுவலாமென்ற போது அரசாங்கம் என் யோசனையை நிராகரித்துவிட்டது."

இந்த உண்மைகளை அறியும்போது நமக்கு உண்டாகும் துயரமும், சங்கடமும்சொல்லத்தரமில்லை. நாயுடு அவர்கள் தமது அனுபவஞானத்தை அளிக்க முன்வருகிறார்—நிர்வாகத்திறனை சமர்ப்பிக்கத் தயாராயிருக்கிறார்—ஏராளமான பண உதவி செய்கிறார் — ஆனல்...! அரசாங்கம் இவற்றை உபயோகித்துக் கொள்ளும் ஞானம் படைத்திருக்கவில்லை. என்னே, இந்தக் கொடுமை!

இத்தகைய சந்தர்ப்பங்களில், தொழிற் கல்வி ஆலோசனை கௌன்சிலில் அங்கத்தினராக இருந்துகொண்டு மாத்திரம் தாம் எவ்வாறு எவ்வித உருப்படியான வேலை செய்து விட முடியும் என்று கசப்புடன் அவர் கூறுவதில் நியாயமிருக்கிறது.

பரீட்சைகள்

இந்தியாவுக்குள்ளேயே மிகச் சிறந்த தொழிற் கலாசாலை என்று கிண்டி நிலையத்துக்குப்

(15-ம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலி பாத்திரக்கடை

Pros. S. V. கந்தசாமி பிள்ளை சன்ஸ்

H. O. திருநெல்வேலி டவுன். பெரியகடைவீதி, திருச்சிராப்பள்ளி.

பித்தளை, தாம்பூரம், வெண்கலம், அலுமினியம், & எவர்சில்வர் பாத்திரங்களும் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

காங்கிரஸ் ஸ்தாபனம் பற்றி காமராஜர் கருத்துகள்

காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும்

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரும், அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினருமான திரு காமராஜ் அவர்கள் சமீபத்தில் செய்த பிரசங்கங்களிலிருந்து சில துணுக்குகள் சுருக்கமாகச் சேகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய காங்கிரஸ் லட்சியங்கள் பற்றியும், நாட்டின் பொருளாதார நிலை பற்றியும் காமராஜரது கருத்துகள் இவற்றில் காணக் கிடைப்பது கவனிக்கத்தக்கது.

—ஆசிரியர்.

"காங்கிரஸின் பரம்பரை விரோதிகளான கம்யூனிஸ்டுகளும், மற்றும் கருப்புச்சட்டையினரும், ஹிந்துமகாசபைக்காரர்களும் நாம சாதித்துள்ள மகத்தான காரியங்களை மறைத்து துவேஷப் பிரசாரம் செய்து வருகின்றனர். இப்பொழுது நமது மக்கள் கஷ்டப்படுவது போலத்தான் உலகம் முழுவதும் மக்கள் போதுமான உணவின்றி கஷ்டப்படுகின்றனர்" என்று காஞ்சிபுரம் தாலுகா மாணும்பதி கிராமத்தில் இம்மாதம் 3-ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பருமான ஸ்ரீ கே. காமராஜ் பேசுகையில் கூறினர். கூட்டத்திற்கு ஸ்ரீ குப்புசாமி நாயுடு, எம். எல் ஏ. தலைமை வகித்தார்.

ஸ்ரீ காமராஜ் மேலும் பேசியதாவது:—

"இப்பொழுது எட்டு அவுன்ஸ் அரிசியாவது கிடைப்பதற்கு காங்கிரஸ் ஆட்சியின் திறமைதான் காரணம். தொழிற்கட்சி சர்க்கார் ஆட்சிசெய்யும் பிரிட்டனில்கூட நல்ல ரொட்டி கிடைப்பதில்லை. அப்படியிருக்க இப்படி இருக்கும் குறைகளுக்கெல்லாம் காங்கிரஸ்தான் பொறுப்பு என்று எதிரிகள் பிரசாரம் செய்வது மக்களை ஏமாற்றுவதற்குத்தான். இதற்கு நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது.

"துவேஷப் பிரசாரத்திற்கு இடம் கொடுத்து வேலை நிறுத்தங்களைச் செய்து கொண்டிருக்க கம்யூனிஸ்டுகளை விட்டு விட்டால் நாட்டில் அராஜகம் ஏற்படும். இப்போதே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிட்டது. இதைத் தடுக்க நாம் எல்லோரும் ஒன்றுகூடி திட்டமிட்டு வேலை செய்ய வேண்டும்.

"காங்கிரஸ்காரர்களுக்கு ஜாதி வித்தியாசமோ எவ்விதமான ஏற்றத்தாழ்வோ இல்லை. பொருளாதார துறையில் நாம் முன்னேறத் திட்டமிட்டு வேலை செய்யவேண்டும். இதற்கு அளவு கடந்த பொறுமை வேண்டும். பட்டினியால் வாடும் கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கை நிலை உயரப் பாடுபடுவதில் எல்லோரும் காங்கிரஸுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

ஜாதி பேதமற்ற சமுதாயம்

"ஜாதி பேதமற்ற சமத்துவ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதே காங்கிரஸின் லட்சியம். காங்கிரஸில் எல்லோரும் சேரலாம். நீங்கள் ஒத்துழைத்தால் தான் காங்கிரஸ் தனது லட்சியத்தை அடையமுடியும். சர்க்கார் நிறைவேற்றும் சட்டங்களை அமுல் நடத்த உங்கள் ஒவ்வொருவருடைய ஆதரவும் வேண்டும்" என்று களியாம்பூண்டி கிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ காமராஜ் பேசுகையில் கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்டம்

திருக்கழுக்குன்றத்தில் ஸ்ரீ காமராஜ் பேசியதாவது:—

"எல்லா இடங்களிலும் மக்கள் பலவித கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. கைத்தறி சரக்கு தேங்கிக் கிடப்பதால் இங்குள்ள தறிக்காரர்கள் கஷ்டப்படுவதுபோலவே பல இடங்களில் தொழிலாளர்கள் வெவ்வேறு காரணங்களால் கஷ்டப்படுகிறார்கள். நமது விவசாயிகளுக்கு வேண்டிய விவசாயக் கருவிகள் குறைந்த விலைக்கு அவர்களுக்கு கிடைக்கவில்லை. உற்பத்தியாகும் விளை பொருள்களுக்கு கட்டுப்படியாகும் விலை நிர்ணயம் செய்யப்படவில்லையென்று விவசாயிகள் கூறுகிறார்கள். தஞ்சாவூர் கிசான்கள் மனைக்கட்டுகள் இல்லையென்று புகார் செய்கிறார்கள். இவையெல்லாம் 150-வருட அன்னிய ஆட்சியின் விளைவாக சமுதாய அமைப்பில் ஏற்பட்டுள்ள அலங்கோலத்தின் விளைவுகள்தான். தமக்கு வேண்டிய பணத்திற்கு வெறும் காகித நோட்டுகளை அச்சடித்துக்கொடுத்துவிட்டு பிரிட்டிஷார் போய்விட்டார்கள். இதனல் விலைவாசிகள் விஷம் போல் ஏறிவிட்டன. இந்தக் கஷ்டம் நமக்குமட்டும் தானென்று நினைக்கவேண்டாம். உலகம் முழுவதிலும் மக்கள் விலைவாசி ஏற்றத்தால் கஷ்டப்படுகிறார்கள். உலகம் முழுவதற்கும் சாமான்களை ஏற்றுமதி செய்யும் அமெரிக்காவில்கூட வேலையில்லாத் திண்டாட்டம் தலை தூக்குகிறது.

"ஆகையால் நம்முடைய கஷ்டங்களுக்கெல்லாம் பொறுப்பு நம்மை ஆண்ட பிரிட்டிஷ் ஆட்சியாகும். காங்கிரஸ்மீது வீண் பழிசுமத்துவதைவிட்டுவிடுங்கள். இபபொழுதுள்ள கஷ்டங்களிலிருந்து நாம் மீளும் வகையென்ன என்பதைப்பற்றி நாம் எல்லோரும் யோசிக்கவேண்டும். அதை விட்டுவிட்டு எல்லா துன்பங்களுக்கும் காங்கிரஸ்தான் பொறுப்பு என்று கூறிக்கொண்டிருப்பதால் நாட்டில் அராஜகம் தான் ஏற்படும்.

காங்கிரஸ் தரித்திரர்களின் ஸ்தாபனமாகும்

இதுவரை நாலணா கொடுப்பவர்கள்தான் காங்கிரஸில் சேரலாம். ஆனல் இனிமேலோ என்றால் நாலணா கொடுக்க முடியாத ஏழைகளும் காங்கிரஸ் அங்கத்தினர்களாய் சேரலாம். காங்கிரஸ் இனி தரித்திரர்களின் ஸ்தாபனம்."

தவமகள் ஸரோஜினி

ஆயிரம் ஆண்டுகள்யாம்—அறிந்த
அறிவின் அறிவுருவாய்

பரம்பரை எத்தனையோ—சேர்த்த
பண்பின் திரள் வடிவாய்

ஆதியும் பாதியுமாய்—என்றே
ஆடிய கூத்தினிலே

சோதிவெளி சலிக்கச்—செய்த
சக்திப்பெருங்கனலாய்

பெண்மையின் சீர்த்தியெலாம்—எதிர்
போந்த தவமகளாய்

உண்மை உண்மை யென்றே—மாறு
உணமைப் பொருள்தேடும்

உயிரின் உணர்ச்சித்தீ—உயிர்த்த
ஒண்சுடர்க் கவியரசி

எங்கள் திருநாட்டில்—கோடியர்
எத்தனை நோன்பிருந்தோம்

சந்ததம் போற்றுகின்றோம்—சரோஜினி
சாந்தி அமர்ந்திடவே.

— "மந்தஹாஸன்"

இந்திய சர்க்காரின் பருத்திக் கொள்கை

தவறுகள் திருந்துமா?

சில புள்ளி விபரங்கள்

(எஸ். ரத்னசாமி)

> தற்போது நாட்டில் கொடுமையான பஞ்சு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக நமது மாகாணத்தில் நூல் பற்றுக்குறையினால் துணி உற்பத்தி முழுவதும் தடைப்பட்டு விடுமோ என்ற பயங்கர நிலை தோன்றுகிறது. பற்பல பொருளாதாரத் தவறுகளின் குழம்பிய பலனாக இந்தக் கொடுமையான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையின் காரணத்தைத் தெளிவுபடுத்தவும், இந்திய சர்க்காரின் பருத்திக் கொள்கையில் இருக்கும் தவறுகளை எடுத்துக் காட்டவும், திருப்பூர் கே. எஸ். ஆர். அண் கம்பெனியைச் சேர்ந்த பிரபல பஞ்சு வியாபாரி திரு, எஸ். ரத்னசாமி அவர்கள் இக்கட்டுரை எழுதியுள்ளார். அரசாங்கமும் பொதுமக்களும் கவனிக்கத்தக்க சிந்தனைப் பொருள் இதில் காணப்படுகிறது. — ஆசிரியர்.

சமீபத்தில் பஞ்சு விலை கட்டுப்பாடுபற்றி கோவையில் முதலாளிகள் சங்கத்தினர் வெளியிட்ட அபிப்பிராயங்களைப் பார்த்தேன். அதனபடி பஞ்சு விலைகள் சர்க்காரின் நிர்ணய விலைகளுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதால் பருத்தி விலைகளையும் கட்டுப்பாடு செய்யுமாறு சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள்.

இது சாத்தியமா என்பதை அநுபவமிகுந்தவர்களே யோசியாமல் சொல்லுவது வியப்பாக இருக்கிறது.

முதலாவதாக பஞ்சு விலையை மட்டும் கொண்டு பருத்தி விலையை நிர்ணயம் செய்ய இயலாது பருத்தி விதையின் விலையையும் சேர்த்தே நிர்ணயம் செய்ய இயலும். பருத்தி விதையின் விலையோ ஏற்ற இறக்கமுள்ளதாக இருக்கிறது. அதன் விலையையும் கட்டுப்படுத்தலாம் என்று கூறினால் விதைகளில் (உதாரணமாக கம்போடியா விதைகளிலேயே) பல தரங்கள் உண்டு என்பதுடன், சில சமயங்களில் விவசாயிகள் ஈரமாகப் பருத்தியைக் கொண்டுவரும்போது கொட்டையிலுள்ள ஈரமும் விலைகள் நிர்ணயத்தில் பெருந்தொல்லையாக இருக்கும்.

இரண்டாவதாக எல்லாவிதப் பருத்தியும் ஒரே அளவுபஞ்சைக் கொடுப்பதில்லை. உதாரணமாக அவினாசி கம்போடியா எட்டு பொதி பருத்திக்கு ஒருபாரம் பஞ்சு கொடுக்கிறது என்றால் காங்கயம் கம்போடியா ஒன்பது பொதிக்கே ஒருபாரம் பஞ்சு கொடுக்கும். பருத்தி விலை நிர்ணயம் என்றால் அவனாசிப் பருத்திக்கு ஒருவிலை, பெருந்துறைப் பருத்திக்கு ஒருவிலை, காங்கயம் பருத்திக்கு ஒருவிலை, தாராபுரம் பருத்திக்கு மற்றொரு விலை என்றல்லவோ ஏற்படும். இது சாத்தியமா? கம்போடியாவைக் காட்டிலும் கருங்கண்ணியில் இன்னும் அதிக சிரமத்தைக் கொடுக்கும்.

மூன்றாவதாக சில பருத்திகளில் விதைப் பருத்தி விதை எடுக்கத் தகுந்தமுறையில் இருக்கும். இதற்கு வியாபாரிகள் பொதி ஒன்றுக்கு சில சமயங்களில் ரூபாய் 5-வரை அதிகம் கொடுத்துவாங்குவார்கள். இத்தகையப் பருத்திக்குத் தனிக் கன்ட்ரோல் விலை ஏற்படுத்துவதா?

மேலே சொன்ன காரணங்களால் பருத்தி விலை நிர்ணயம் சாத்தியமா அல்லது இன்னும் கண்ட்ரோல் தொல்லைகள்மிகுமா என்பதைச் சிறிது சிந்திக்குமாறு நண்பர்களை வேண்டுகிறேன்.

இது நிற்க, மில் முதலாளிகள் சங்கத்தாரின் மற்ற தீர்மானங்களையும் சர்க்கார் கண்ட்ரோலையும் கவனிப்போம்.

தென்னிந்தியப் பஞ்சு இங்கேயே உபயோகப் படுத்தப்பட வேண்டுமென்றும்கூறுகின்றனர். கோவை மில் முதலாளிகள் முதலில் குடியானவர்கள். அவர்களில் பெரும்பாலோர் நேரடியாக விவசாயத்தில்ஈடுபட்டுள்ளவர்கள். குடியானவனுடைய இன்னல்களை நன்குணர்ந்தவர்கள். அவர்களே இதைக் கோருவது மிகவும் வேதனையாக இருக்கின்றது.

1945-ம் வருஷத்திலே சர்க்காரின் குறைந்தபக்ஷ விலை கம்போடியாவிற்கு 550-ஆக இருந்தது—குறைந்தபக்ஷ விலைகளிலேயே குடியானவர்களின் நன்மைக்காக பஞ்சைக் கொள்முதல் செய்துகொள்வதாக சர்க்காரின் வாக்குறுதி. ஆனால் கம்போடியா பஞ்சு சுமார் ரூபாய் 375-வரை விற்றது. இது குறைந்தபக்ஷ விலையைக் காட்டிலும் ரூ 175/- குறைவல்லவா? குடியானவனுக்கு சர்க்கார் கொடுத்த வாக்குறுதி எங்கே? பம்பாய்போன்ற மார்க்கெட்டுகளின் குறைந்தபக்ஷ விலைக்குப் பஞ்சு கொள்முதல் செய்த சர்க்கார் நமது திருப்பூர் குடியானவனை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இந்த நிலையில் பம்பாய் வியாபாரிகள் கொள்முதல் செய்ய ஆரம்பித்ததால் தான் விலைகள் புத்துயிர் பெற்றதும், உச்ச விலைகளை அடைந்ததும் யாவரும் அறிந்ததே. அம்மாதிரியே வெளி மாகாண வியாபாரிகளது நியாயமான போட்டியில்லாவிட்டால் குடியானவனுடைய கதி அதோ கதிதான். என்பது திண்ணம்.

உயர்ந்த இழைப் பஞ்சுக்கு இன்றுள்ள விலைகள் நியாயமற்றவை என்பதை இந்தியன் சென்ட்ரல் காட்டன் கமிட்டியே சர்க்காருக்குத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது. ஆதலால் கம்போடியா பஞ்சுக்கும் கருங்கண்ணி பஞ்சுக்கும் நியாயமான விலையை நிர்ணயிக்குமாறு சர்க்காரைக் கோருவதே மில் முதலாளிகளுக்கு நன்மை பயக்கும்.

இன்றுள்ள பற்றுக்குறைப் பூதங்களைப் பெற்று வளர்ப்பது சர்க்காரின் நாசகாரப்பொருளாதாரக்கொள்கையாகும். உண உற்பத்தியைப் பெருக்குங்கள்! என்று கோஷித்தனர். நடந்ததென்ன? நாம் இறக்குமதி செய்வதற்காக மற்ற நாடுகள் உணவு உற்பத்தியைப் பெருக்கின. பெருக்குகின்றன. பஞ்சுக்கும் இக்கதியே நேர்ந்துவிட்டது. இன்று அகில இந்தியாவும் பருத்தி விதைக்கப்பட்ட விஸ்தீரணம் 86,30,000-ஏகர். சில வருஷங்களுக்கு முன்பிருந்த பருத்தி வேளாண்மை விஸ்தீரணத்துடன் ஒப்பிடும்பொழுது இது மிகவும் குறைவு.

நடப்பு வருஷத்திற்கு நமது மில்களுக்குத் தேவையான பஞ்சு சுமார் 3900000 பேல்கள். நமது உற்பத்தி சுமார் $22\frac{1}{4}$-லக்ஷம் பேல்கள். பாகிஸ்தானிலிருந்து நமக்கு ஏற்றுமதி செய்வதாக வாக்களிக்கப்பட்டபஞ்சு சுமார் $6\frac{1}{2}$-லக்ஷம் பேல்கள். இவை போக மீதி பற்றுக்குறையை நமது குறைவான இருப்பிலிருந்தே எடுக்கவேண்டியிருக்கிறது. வியாபாரிகளிடம் இருப்பு சுமார் 1000000 பேல்கள்தான். இந்த சங்கட நிலையை ஏற்படுத்தியதுயார்? நமது மத்திய சர்க்கார்.

பாகிஸ்தான் பிரிந்ததில் நாம் மத்திய இழைப்பஞ்சும் உயர்ந்த இழைப் பஞ்சும் இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு வந்துவிட்டோம் என்பதை உணராமல், சில பம்பாய் வியாபாரிகளின் பணப்பெட்டி நிரம்புவதற்காக 10 லக்ஷத்திற்கு அதிகமான பேல்களை வெளியேற்ற அநுமதி கொடுத்தது மகத்தான தவறல்லவா? இதற்கு யார் பொறுப்பு?

இறுதியாக ஒன்று கூற விரும்புகிறேன். சர்க்காரின் கட்டுப்பாட்டுக்கொள்கை தற்கொலைக் கொள்கையாகும். இக்கட்டுப்பாட்டினால் உற்பத்திபாதிக்கப் படுகின்றது சரக்கின் தரம் குறைகின்றது. பருத்தி வேளாண்மை குறைவினால் பஞ்சுக் குறைவு மட்டுமல்ல. மாட்டின் சத்துள்ள தீனியான பருத்தி விதை மிகவும் குறைந்தது. இதனால் பஞ்சுவிலை சமாதான காலத்தில் இருந்ததைப்போல் $2\frac{1}{2}$ மடங்கு அல்லது 3 மடங்கு ஏறியிருக்கும்பொழுது பருத்தி விதையின் விலை பத்து மடங்கிலிருந்து 12 மடங்குவரை உயர்ந்திருக்கிறது. இந்நிலை மாற வேண்டுமானால் சர்க்கார் தங்களது தவறைத் திருத்தி உற்பத்திக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

✱

செய்திகள்

நவாபிற்கு மதுரை தந்த பட்டம்

மதுரை செல்லம் தியேட்டரில் முகாம் செய்திருந்த நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரின் நாடகங்களைப் புகழ்ந்து பாராட்டி, அதன் உரிமையாளரும் கலைஞருமான ஸ்ரீ. டி. எஸ். ராஜமாணிக்கத்திற்கு, மதுரை தமிழ் சங்க புலவர்களும், ஷை சங்க உப தலைவர் டி. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார், ஸ்ரீ. பி. டி. ராஜன், நகரசபைத் தலைவர் ஸ்ரீ. டி. கே. ராமா முதலியோரும், மற்ற பிரமுகர்களுமாகக் கூடி பாராட்டிப் பேசி, "நாடகக் கலைக் காவலன்" என்ற பட்டத்தையும் அன்னாருக்கு அளித்தார்களாம்.

'தந்தி' பத்திரிகை காரியாலயத்தினர் ஒரு வெள்ளிக் கோப்பை அளித்தனராம். தங்கத்தோடா, வெள்ளி கேடயம், ஸ்ரீ ஐயப்பன் உருவத்துடன் கூடிய வெள்ளிப் பேழை முதலியவைகளும் ஷை பிரமுகர்களால் வழங்கப்பட்டது.

பட்டாபிஷேகம்

26—2—49 உடன் மதுரை தேவி பாலகான வினோத சங்கீத சபையார் மதுரை முகாமை தமது பட்டாபிஷேக நாடகத்துடன் முடித்துக்கொண்டனர். ஏராளமான வெகுமதிகள் கம்பெனிக்கு அளிக்கப்பட்டன. ஸ்ரீ. பி. டி. ராஜன் இரு வெள்ளிக் குத்துவிளக்குகளை அளித்து வாழ்த்தினர். ஏராளமான பிரமுகர்கள் விஜயம் செய்து பாராட்டிப் பேசினர்.

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு :— "பாபு ஹால்" சைனுபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 13—3—49

மாகாண உணவு நிலை

டாக்டர் ராஜனவர்கள் சென்னை மேல் சபையின் முன் மாகாண உணவு நிலை பற்றிச் செய்திருக்கும் பரிசீலனை கவனத்துக் குரியது.

ரேஷன் அளவை பன்னிரண்டு அவுன்சாக உயர்த்த முடிவு செய்யப்பட்ட சேதி கிடைத்த சில நாட்களுக்கெல்லாம் வந்திருக்கும் இந்தப் பரிசிலனை பொதுமக்களுக்குச் சற்று எதிர்பாராததாயிருக்கலாம். ஆனலும் தற்போது நமக்கு ஏற்பட்டுள்ள பற்ருக்குறை நமது பழைய அனுபவங்களுக்கு முன் அவ்வளவு பயங்கரமானதல்ல என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

மத்திய அரசாங்கத்தின் உதவியில் அதிக நம்பிக்கை வைக்க முடியாது என்ற விஷயம் நமக்கு மிகவும் தெளிவாகப் போய்விட்டது. மேலும் வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவில் நமது மாகாணம் கோரும் அளவு நமக்குப் பங்கு கிடைக்காதென்றும் நிச்சயமாகத் தெரிந்து போய்விட்டது. வருகிற அக்டோபர் முடியும் வரையில் இந்தப் பன்னிரண்டு அவுன்ஸ் திட்டத்தை சமாளிக்க சுமார் 7 லட்சம் டன் உணவு தானியம் தேவைப்படுவதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று விளக்க வேண்டியதில்லை. உண்மையில் நாம் செய்யவேண்டியதையெல்லாம் அக்கரையோடு சரியாகச் செய்து விட்டோமா என்ருல் இல்லையென்றே கூறவேண்டியிருக்கிறது. செய்ய வேண்டியதைச் செய்யாததுடன், செய்யக்கூடாததையும் செய்து வருகிருேம்.

பற்ருக்குறை யென்றவுடன் அதன் காரணங்களைக் கொள்முதல் பத்தியில் தேடிப்பார்ப்பது இயற்கையே. நமது மாகாண அரசாங்கத்தின் கொள்முதல் நடவடிக்கைகளுக்கு ஏதாவது தெளிவான அடிப்படை இருந்திருக்கிறதா? இது இல்லையென்றே பல அனுபவங்களிலிருந்து தெரியவருகிறது.

தஞ்சை ஜில்லா மிராசுதார் ஒருவர் பல நாட்களுக்கு முன் "ஹிந்து" பத்திரிகைக்கு எழுதிய கடிதம் சென்னை அரசாங்கத்தின் பிரதிநிதியான தஞ்சை கலெக்டருக்கு கௌரவம் அளிப்பதாயில்லை. தஞ்சை ஜில்லாவில் வெளியில் நெல் விலைவாசி மிகக் குறைந்திருக்கிறது. சர்க்காரது கொள்முதல் விலை இதைவிட அதிகமாயிருக்கிறது. எனவே அந்த மிராசுதார் சப்ளை அதிகாரிக்கும், கலெக்டருக்கும் கடிதமெழுதி தம்மிடமிருந்த சில நூறு கலம் நெல்லை எடுத்துக் கொள்ளும்படி வேண்டியதற்கு யாதொரு விதமான பதிலும் கிடைக்கவில்லையென எழுதியிருக்கிருர். இதுதான் 'கொள்முதல்' வேகம் என்ருல் நம்மால் இதைப் பாராட்ட முடியவில்லை.

இது ஒருபுறமிருக்க மற்ருெருபுறம் சிறு உற்பத்தியாளருக்கு கொள்முதல் அதிகாரிகளிடமிருந்து தொந்தரை அதிகமாயிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. டாக்டர் ராஜன் இதைக் கவனிப்பதாகக் கூறியுள்ளது வரவேற்கத்தக்கதே.

உணவுப் பொருள் விநியோக முறைகள் தாறுமாருகவும், பொது ஜனத்தின் பணத்தை அனுவசியமான உணவுப்போக்குவரத்தில் செலவிடுவனவாகவும் இருக்கின்றன.

உணவுப்பொருள் பாதுகாப்பு மகாமோசமாக இருந்து வருகிறது. சரியான பாதுகாப்பின்மையால் கெட்டுப்போகும் ஏராளமான உணவு தானியத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டு விடுகிருேமா என்று கேட்கலாம் சர்க்கார்! ஆனல் குப்பைத் தொட்டியில் போடுவதனல் ஏற்படும் உணவின்மை என்ற பாதகத்தைவிட, மிருகங்கள்கூட முகரத் தகாத உணவு தானியத்தை இரண்டு காலால் நடந்து, உரிமைகள்—கடமைகள், கலை, கலாசாரம், தன்மானம் இவற்றுடன் சுதந்திர புருஷர்களாக நடமாடவேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் ஜீவன்களுக்கு விநியோகிப்பது பயங்கரமான அதிக பாதகத்தை விளைக்கும் என்று வருத்தத்துடன் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது.

இப்படியிருக்கிறது நமது மாகாண உணவு நிர்வாகம். இந்த நிலையில் "தன்கையே தனக்குதவி" நிர்ப்பந்தம் எவ்வளவு சிறப்பாக நிறைவேறும் என்பது நமக்கு விளங்கவில்லை.

குறிப்பாகத் திருச்சி ஜில்லா வாசிகளுக்கு இந்த உணவு நிர்வாகத்தின் முழுப் பலனும் நன்ருக அனுபவத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதை வெட்கத்தோடு எடுத்துக் காட்டுகிருேம். பச்சையரிசி என்று ரேஷன் கார்டுகளில் எழுதிவிட்டு, நாற்றமெடுத்த புழுங்கலரிசியையே தினசரி உணவாக இதுகாறும் அனுபவித்திருக்கும் திருச்சி ஜில்லா வாசிகளது "அதிர்ஷ்டம்" சொல்லத்தரமன்று!

கடல் நீரிலிருந்து பெட்ரோல்

சென்னைத் தமிழர் ஆராய்ச்சி

சென்னைவாசி ஒருவர் உலகத்தையே பிரமிக்கவைக்கும் ஒரு அற்புத ஆராய்ச்சியை செய்து முடித்திருக்கிருர். கடல் நீரிலிருந்து செயற்கைப் பெட்ரோல் தயார் செய்யும் முறையை அவர் கண்டுபிடித்திருக்கிருர். இந்த முயற்சிக்கு அதிக செலவும் ஆகாது என்பது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். இதைக் கண்டு பிடித்தவரின் பெயர் ஸ்ரீ சி. ஆர். பக்தவத்சலம். அவர் சென்னை தேசீய ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டரும் ஸ்தாபகருமாவார்.

சென்னை எண்ணை உற்பத்தி கம்பெனி ஒன்றைச் சேர்ந்த ஒரு வெள்ளையர் இந்தமுறையை சொல்லித் தந்துவிட்டால் ரூ 5 லட்சம் தருவதாகச் சொன்னராம். ஆனல் ஸ்ரீ பக்தவத்சலம் மறுத்துவிட்டார்.

தேசீய ஆராய்ச்சி கழக காரியதரிசி ஸ்ரீ எல் எஸ். மணி விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:— இந்தியாவை, ஏன் உலகையே திடுக்கிடும்படியான ஒரு அற்புத ஆராய்ச்சியை சென்னைவாசியும், சென்னை தேசீய ஆராய்ச்சிக் கழகத்தின் ஸ்தாபகரும் டைரக்டருமான ஸ்ரீ சி. ஆர். பக்தவத்சலம் என்பவர் கண்டுபிடித்து 4-3-49 சென்னையில் உள்ள பிரமுகர்களுக்குப் பகிரங்கப்படுத்தினர். இதைப் பற்றி பிரதம மந்திரி நேருவுக்கு முன்னமே தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவில் பெட்ரோல் உற்பத்திக்காக பல வருஷங்களாய் நீண்ட ஆராய்ச்சிகளும், பல லட்ச ரூபாய் செலவுகளும் செய்யப்பட்டன. கடைசியில் முடிவு திருப்திகரமானதாயில்லை. உலகில் எல்லா தேசங்களிலும் பெட்ரோல் கிடைக்கவில்லை. சிற்சில நாடுகளில்தான் பெட்ரோல் கிடைக்கிறது. இதனல் நாடுகள் பிடிக்க மண்ணசை ஏற்பட்டு யுத்தத்தில் இறங்கவேண்டியிருக்கிறது. இந்தியாவிற்கு வெளிநாடுகளிலிருந்து சொற்ப அளவு பெட்ரோல்தான் இறக்குமதி செய்யப்படுகிறது. கோடிக்கணக்கில் செலவழித்தும் ரேஷன் முறையில்தான் 'பெட்ரோல்' நம தேசத்தில் கொடுக்கப்படுகிறது.

"இந்தியா வெளிநாட்டு பெட்ரோலுக்கு இனிகாத்துக்கொண்டிருக்கவேண்டாம். வெளிநாட்டார் கபட உதவியை உதறித் தள்ளுவோம்" என்கிருர் ஸ்ரீ பக்தவத்சலம்.

கடல் நீரிலிருந்து பெட்ரோலை அதிகச்செலவில்லாமல் உற்பத்தி செய்யமுடியும் என்பதை உலகுக்கு வெளிப்படுத்திவிட்டார். இந்திய சர்க்காரிடம் திட்டத்தை விளக்கத் தயாராயிருக்கிருர். விரைவில் சென்னை—பம்பாய்—டெல்லி-கல்கத்தாவில் "வாட்ரோலியம்" ஆராய்ச்சியை விளக்கி மோட்டார்களை ஓட்டிக் காட்ட ஏற்பாடு நடந்து வருகிறது.

சென்னையில் மந்திரிகள், அதிகாரிகள், பத்திரிகை ஆசிரியர்கள், பிரமுகர்கள், தலைவர்கள், விஞ்ஞானிகள் முன்னிலையில் "வாட்ரோலியம்" செய்து காட்டப்படும். வாட்ரோலியம் எவ்விதம் தயாரிப்பது, அதன்மூலம் வாட்டர் என்ஜின், பவர் ஓர்க்ஸ், மோட்டார்கள் (பெட்ரோலினல் என்னென்ன ஓடுகின்றனவோ! அவற்றையெல்லாம் வாட்ரோலியத்தினல் பகிரங்கமாய் ஓட்டிக்காட்டுவார். இதற்காக 2000 ரூபாயில் ஒரு "ஜலம்இறைக்கும் மெஷின்" வாங்கப்பட்டிருக்கிறது. பத்திரிகை ஆசிரியர்களுக்கு அழகிய புட்டிகளில் வாட்ரோலியம் இலவசமாக வைபவத்தில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வாட்ரோலியம் சமுத்திர ஜலத்தைக் கொண்டு தயாரிக்கப்படும். இத்துடன் சில கழிவுப் பொருள்களிலிருந்து கிடைக்கும் சக்கைகள் கலந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இக் கழிவுப் பொருள்கள் இந்தியாவில் அபரிமிதம். கடல் முப்புறமும் சூழ்ந்திருக்கிறது. நம் நாட்டுக்குத் தேவையான வாட்ரோலியம் கிடைக்க வழியிருக்கிறது.

வாட்ரோலியத்தினல் மோட்டார்களை அதிக வேகத்துடன் ஓடச்செய்ய முடியும். ஒரு காலன் வாட்ரோலியத்தின் விலை ரூ 0-8-0-க்கு கொடுக்கமுடியும். (பெட்ரோலின் கண்ட்ரோல் விலை காலன் ரூ 2—1—6) ஒரு 5 குதிரை சக்தியுள்ள நீர்இறைக்கும் மெஷின் பெட்ரோலினல் 4 மணி நேரம்தான்வேலைசெய்யலாம். ஆனல் வாட்ரோலியத்தினல் ஓட்டப்படும் மெஷின், அதிகமாக கூட ஒருமணி நேரம் வேலை செய்கிறது.

ஆவடி, பொன்னேரி, தாம்பரம் இப்பக்கத்தில் சர்க்கார் வசதி செய்துகொடுத்தால் "வாட்ரோலியம்" உற்பத்திசாலை நிறுவப்படும்.

வாட்ரோலியம் உற்பத்திக்கு அதிகச் செலவு கிடையாது. வாட்ரோலியத்தின் மூலம்பெட்ரோலினல் ஓடும் சகலகருவிகளையும் ஓட்ட முடியும் என்பதை சென்ற 8 வருஷமாக ஆராய்ச்சி செய்து ஸ்ரீ பக்தவத்சலம் முடிவுக்கு வந்திருக்கிருர். "வாட்ரோலியம்" தயாரிக்கும்முறை மெஷின்கள் ஓடும்முறை சகலமும் இம்மாத முடிவில் நகரில் ஒரு பொதுவைபவத்தில் செய்து காட்டப்படும். —'தினசெய்தி.'



ஜுபிடர் 'வேலைக்காரி'

ஸ்டுடியோ :— சென்ட்ரல்

டைரக்ஷன் :— ஏ. எஸ். ஏ. சாமி

கதை, வசனம் :— சி. என். அண்ணாத்துரை

நடிகர்கள் :— கே. ஆர். ராமசாமி, டி எஸ். பாலையா, நம்பியார், புளிமூட்டை ராமசாமி, டி. பாலசுப்ரமணியம், எம். வி. ராஜம்மா, வி. என். ஜானகி, லலிதா—பத்மினி, மற்றும் பலர்.

நாடக மேடையின் சிறு எல்லைகளுக்குள், சாதனங்களுக்குள் 'அண்ணா'வின் 'வேலைக்காரியைப்' பார்த்த ரஸிகர்களுக்கு ஜுபிடர் தயாரிப்பான திரைப்பட 'வேலைக்காரி' தன் முழு வடிவும் கொண்டு கோர்வையாகக் கிடைத்திருப்பது வரவேற்கத்தக்கதாயிருக்கும்.

கதை, வசனம் :

கதை, வசனம் அண்ணாத்துரையினுடையதே என்று சொல்ல வேண்டியதில்லை. கதையின் உள்ளடங்கிய கருத்துகளும், நீதியும் பாராட்டத்தக்கவை. கதைப் போக்கு கட்டுக்கோப்புடன், விறு விறுப்பாயிருக்கிறது. வசனம் அமர்க்களமாயமைந்திருக்கிறது.

பண ஆசை பிடித்த ஜமீந்தாரின் அக்கிரமத்தினால் தற்கொலைக்கு ஆட்படுத்தப்படும் ஏழையின் மகனான ஆனந்தன், காளிதேவியிடம் தனக்குள்ள பக்தியினால் அவளிடம் முறையிட்டு மனம் வெதும்பி, பின்னர் நண்பன் மணியின் யுக்தியால் தன் தந்தையின் கோர மரணத்துக்குப் பழிவாங்கும் திட்டத்தை வகுத்துக்கொள்கிறான். மேவார் விலாசத்து வாரிசின் பிணத்தைத் தற்செயலாகக் கண்டெடுத்த ஆனந்தனும், மணியும் சேர்ந்து திட்டமிட்டு தங்கள் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள, ஆனந்தன், மடிந்து போன இந்த மேவார் விலாச வாரிசாக உலகத்தில் புது பாகம் ஏற்கிறான்.

இவ்வாறு சமூகத்தில் ஒரு பெரிய பணக்காரனது செல்வாக்கைப் பெறுகிறான். ஜமீந்தாரின் பெண்ணையும் மணக்கிறான். அவளைக் கொடுமைப் படுத்துவது, மருமகன் என்ற முறையில் ஜமீந்தாரின் பணத்தைத் தாறுமாறாக செலவிடுவது, குடிகாரன் — கூத்திக் கள்ளன் போல் நடித்து மாமனாரின் மானத்தை வாங்குவது என்று பல முறைகளில் அவரைத் துன்பத்துக்காளாக்குகிறான்.

ஜமீந்தாரின் மகன் அமிருதம் என்ற வீட்டு வேலைக்காரப் பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால் அந்தஸ்தும், தந்தையும் குறுக்கே நிற்கிறார்கள். பின்னர் அதை உடைத்துக்கொண்டு வெளியேறுகிறான். நண்பர்களின் உதவியைத் தேடி சென்னை சென்றவன் ஏமாற்றத்துக்காளாகி ஒரு ஆசிரமத்துக்குள் புகுந்து அந்த சந்நியாசியின் அக்கிரமங்களைக் கண்டு வெதும்பி அவரைக் கொலை செய்து கொலைக் குற்றத்துக்கு ஆளாகிறான்.

இதற்கிடையில் வீடு எறிந்து போய்விட்டதால் வெளியேறிய அமிருதம் வேறு ஊர் சென்று பழம் விற்கும் பெண்ணாகி பைத்தியம் பிடித்த பர்மா அகதியினால் தமது பெண்ணென்று அழைத்துச் செல்லப்பட்டு, அவரது பித்தந் தெளியவைப்பதில் வெற்றியடைந்து, கடைசியில் அவரது வளர்ப்புப் பெண்ணாகி பெரிய அந்தஸ்தையடைகிறாள்.

இதற்கிடையில் நண்பன் மணியின் உதவி கொண்டு சந்நியாசியின் சரித்திரத்தையும், நடவடிக்கைகளையும் துப்பறிந்து வடநாட்டு வக்கீலாக வேஷம் தரித்து ஜமீந்தாரின் மகனுக்கா நீதிஸ்தலத்தில் வாதாடி, கொல்லப்பட்ட சந்நியாசி உண்மையில் சிறையினின்று தப்பிய பயங்கரப் பேர்வழி என்று நிரூபித்து ஜமீந்தார் மகனுக்கு விடுதலை வாங்கித் தருகிறான்.

கடைசியில் பர்மிய அகதியின் வளர்ப்புப் பெண்ணான அமிர்தத்துக்கும், ஜமீந்தார் மகனுக்கும் (பழைய காதலர்கள்) திருமணம் நடைபெறுகிறது. திருமண வைபவத்தின்போது ஆனந்தன் தன் பூர்வ கதையை எல்லோருக்கும் அறிவுறுத்துகிறான். ஜமீந்தார் தனது பழைய கொடுமைகளுக்காக வருந்தித் திருந்துகிறார்.

நடிப்பு :

ஆனந்தனாகப் பிரதமபாகமேற்று நடிக்கும் கே. ஆர். ராமசாமி எதிர்பார்க்கப்பட்டதைவிடப் பன்மடங்கு சிறப்புற நடித்து நம்மை வியப்புக்காளாக்குகிறார். உண்மையில் திரைப்பட நடிப்பில் இதுவே ராமசாமியின் முதல் வெற்றி—மகத்தான வெற்றி என்று கூற வேண்டும்.

நண்பன் மணியாக நடிக்கும் டி. எஸ். பாலையா குணசித்திர உணர்வுடன் நடித்துத் தமது ஸ்தானத்தை ஒருபடி உயர்த்திக் கொண்டிருக்கிறார். நல்லெண்ணம் படைத்த, தந்திரமும் பகுத்தறிவும் சேர்ந்த ஒரு லோகாயத வாதியின் சித்திரத்தை நம் கண் முன்னே அழகாக வெளிப்படுத்துகிறார்.

வேலைக்காரி அமிருதமாக நடிக்கும் ராஜம்மா பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். வி. என் ஜானகியின் மிடுக்கு பொருத்தமாக இருக்கிறது. ஜமீந்தாராக நடிக்கும் பாலசுப்ரமணியத்தின் நடிப்பு இயல்பாக இருக்கிறது.

டெக்னிக் :

படத்தின் டெக்னிக் ரொம்ப அழகாக இருக்கிறது. சம்பவங்களைத் தொடர்பு படுத்தும் சில 'உத்தேசங்கள்' விசேஷ அம்சங்கள். ஆங்கில சமூகப்படங்களின் சூழ்நிலைப் பொருத்தமும் கட்டுக்கோப்பும் இதில் காணப்படுகிறது.

சங்கீதம், பாடல்கள் :

பாடல்களின் சாகித்தியங்கள் கருத்து நிறைந்து பொருத்தமாக அமைந்திருக்கின்றன. இசை, இனிமையும், கல கலப்பும் நிறைந்திருக்கிறது. பின்னணிக் குரல் அனுபவமுள்ள சாரீரமாக இருக்கிறது.

நடனம் :

லலிதா, பத்மினியின் நடனங்கள் விசேஷமான தனியம்சமாகத் தோன்றாமல் கதைப் போக்குடன் ஒட்டி நல்ல முறையில் பொருந்தியிருக்கின்றன. இவற்றைத் தனியே "எடுத்துப் பார்க்கத்" தேவை ஏற்படவேயில்லை.

பொதுவாக :

பொதுவாக "ஜுபிடர்—அண்ணா" கூட்டு உழைப்பினால் 'வேலைக்காரி' பாராட்டத்தக்க வெற்றி கண்டிருக்கிறது. "பிரசாரப்படமோ" என்று வேறு முறையில் பயப்படாமல் "பிரசாரப் படம்தான்—ஆனால், நல்ல பிரசாரம்தான்" என்று தைரியமாகப் பார்க்கும் அளவுக்கு, விரசமில்லாது, யாருடைய உணர்ச்சிகளையும் தீண்டாமல் வரவேற்கத்தக்க முறையில் அமைந்துள்ள படம் "வேலைக்காரி".

நடனக்காட்சியல்ல—உடற்பயிற்சி வகுப்பு பிரிட்டனில் லோபரோ கலாசாலையில் மகோன்னதமாக நடத்தப்படுகிறது.

குளித்தலை டி. மு. கோர்ட்.
O. S. 555/1948

நல்லய்ய முதலியார் —வாதி

கனகசபை குருக்கள் 2
ஆத்மநாத குருக்கள் 3
நீலகண்ட குருக்கள் 4
—பிரதிவாதிகள்

ஷை 2 to 4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பதாவது

ஷை வாதி உங்கள் வகையரு பேரில் ஸ்வாதீனம் மத்யகால வரும்படிக்கு தாவா செய்து ஷை தாவா 17—3—49 தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது. அன்று நீங்கள் ஆஜராகாவிடில் எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பு ஏற்படும் என்பதை அறியவும்.

K. திருவேங்கடாச்சாரியார்,
வாதி வக்கீல்.

7—3—49 குளித்தலை.

ஹெலி காப்டர் விமானம்

உங்கள் வீட்டு மாடியோ, அல்லது புழக்கடையோ சிறிது பெரிதாயிருந்து அதில் ஒரு விமானம் வந்திறங்கிற்றென்றால் நீங்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இதுதான் நேர்குத்தாக ஏறியிறங்கக்கூடிய ஹெல்லி காப்டர் விமானம்.

சாதாரண விமானங்கள் விபத்துகளுக்கு உள்ளாகும்போது விபத்து எங்கு நேர்ந்துள்ளது என்று கண்டுபிடிப்பதும் விபத்துக்குள்ளானவர்களுக்கு விரைவில் நிவாரணம் அளிப்பதும் கடினமான பிரச்னையாகவே இருந்து வருகிறது. தற்போது விமான விபத்துகளுக்கு உள்ளாகியவர்களை விரைவில் சென்று மீட்டுவர ஹெல்லி காப்டர்கள் மிகவும் உபயோகமுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகவே இவ்வித நிவாரண வேலையை உத்தேசித்து தென் கிழக்கு ஆசியாவில் 17 ஸ்தலங்களில் ஹெல்லி காப்டரை வைக்குமாறு சமீபத்தில் நடந்த விமான போக்குவரத்து மகாநாட்டில் சிபார்சு செய்யப்பட்டது. இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, டில்லி இம்மூன்று நகரங்களிலும் ஹெல்லி காப்டர்கள் நிறுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது ஹெல்லி காப்டர் விமானம் (நேரிறங்கி) ஆகாயத்திலாகட்டும் பூமியிலாகட்டும் மிகப்பயனுள்ள வாகனமாகிவிட்டது. கூடிய சீக்கிரத்தில் சர்வ சாதாரணமாக பழக்கத்திற்கு வந்துவிடும்.

ஹெல்லி காப்டருக்கு மற்ற ஆகாய விமானங்கள் இறங்குவதற்குத் தேவையான பெரும் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பு வேண்டியதில்லை. சாதாரணமாக இறங்க இயலாத இடங்களுக்கு நேரிறங்கி எளிதில் சென்று அங்கு பூமியில் தங்காமல் பார்சல்களை விநியோகம் செய்யவோ அல்லது எடுத்துவரவோ செய்யும். 120 மைல்களுக்குள் உள்ள சிறு தொலைவுகளுக்கு இவ்விமானம் மற்ற விமானங்களைவிட வெகு சீக்கிரத்தில் பறந்து செல்லும்.

வெகு வேகமாகச் செல்லும் விமானங்களுக்கும் நிதானமாக நிலத்தில் செல்லும் இதர வாகனங்களுக்குமிடையே உள்ள பிளவைக் குறைக்க ஹெல்லி காப்டர் மிகப் பயனுள்ள போக்கு வரத்து சாதனமாக உபயோகப்படும். பிரிட்டனில் நடத்திய சோதனைகள் ஹெல்லி காப்டரைக் கொண்டு தபால் சர்வீஸை அபிவிருத்தி செய்யலாம் என்று நிரூபித்தன. வெற்றிகரமான சோதனைகளுக்குப் பிறகு கடந்த ஜூலை 1உயிலிருந்து ஹெல்லிகாப்டர் தபால் சர்வீஸ் தொடங்கப்பட்டிருக்கிறது.

காட்டுத் தீயணைப்பான்

ஹெல்லிகாப்டர் ஒரு சிறந்த தீயணைப்பு சாதனமும் கூட. காட்டுத் தீயை விரைவிற் கண்டுபிடித்து அங்கு தக்க சாதனங்களுடன் சென்று தீ பரவும் முன்னம் இவ்விமானம் உதவும். மேலும் அவ்வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தேவையான சாதனங்களை ஹெல்லி காப்டர் மூலம் கீழே போடலாம்.

சாதாரண சிறகுகளுள்ள விமானங்களைக் கொண்டு செய்யமுடியாத பல காரியங்களை ஹெல்லிகாப்டரைக் கொண்டு எளிதில் செய்து முடிக்கலாம். வனாந்திரப் பிரதேசங்கள் நிறைந்த காடுகளில் காட்டிலாகாவுக்கு இவ்விமானம் பெரிதும் உதவுகிறது. அதாவது வேண்டிய இடத்துக்கு ஆட்களை அனுப்பவும், உணவு மற்ற பொருள்களை சப்ளை செய்யவும், ஸ்தலங்களை சர்வே செய்யவும் மேலிருந்து விதை விதைக்கவும், பூச்சி கொல்லி மருந்துகளை தெளிக்கவும், ரயில் பாதைகளையும் ரஸ்தாக்களையும் பழுதுபார்க்கவும் இது மிகவும் பயன்படும். மற்றும நடுக்கடலில் கப்பல் விபத்துக்குள்ளானவர்களுக்கும் காடு அல்லது மலைப்பிரதேசங்களில் சிக்குண்டவர்களுக்கும் நிவாரணமளிக்கவும் இது சிறந்த உயிர் காக்கும் சாதனமாக இருக்கிறது. வானத்திலிருந்து கீழுள்ள இடங்களை படமெடுக்கவும், எண்ணெய் சுரங்கங்கள் உள்ள இடத்தை கண்டுபிடிக்கவும், பூகர்ப்ப சாஸ்திர ஆராய்ச்சிகள் நடத்தவும், விளம்பர வேலைகளுக்கும் இவ் வாகனத்தின் உதவி இன்றியமையாதது.

இராணுவத்துக்கு ஹெல்லி காப்டர் அநேக வழிகளில் பயன்படுகிறது. எதிரே பீரங்கிகள் இருக்குமிடத்தை கண்டுபிடிப்பதற்கும், மேலிருந்து சப்ளை போக்குவரத்துகளை கவனிப்பதற்கும், யுத்த தளவாடங்களையும் உணவு சப்ளைகளையும் மற்ற பெரிய விமானங்களிலிருந்து பாரசூட் மூலம் இறக்குவதற்கான தகுந்த இடங்களை தேர்ந்தெடுப்பதற்கும் இவ்வாகனம் பெரிதும் உதவுகிறது.

பந்தோபஸ்தைப் பொருத்தவரையில் ஹெல்லிகாப்டர் மற்ற விமானங்களைவிட அபாயமானதல்ல. நேரிறங்கியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுவிட்டால் அதனுடைய சுழலி காற்றின் உதவியைக்கொண்டே சுழன்று சாய்வாக கீழே இறங்கிவிடும்.

இம்மாதிரி சுழலும் சிறகுகளைக்கொண்டு இயந்திரங்களை ஓட்டும் முறையில் பிரிட்டன் உலகிலேயே முதன்மை வகித்து வருகிறது. ஒரு ஒப்பந்தத்தின் காரணமாக பிரிட்டன் 1941 லிருந்து சிவில் விமானங்களையும் ஹெல்லி காப்டர்களையும் தயாரிப்பதை நிறுத்தியிருந்தது. ஆனால் ஒரு பிரமாண்டமான 50-டன் விமானத்தை தயாரிக்கும் காலத்தைவிட குறைவான காலத்திலேயே ஹெல்லிகாப்டரை தயாரித்துவிடலாம் ஏற்கனவேயே இரண்டு ஹெலலிகாப்டர்கள் பிரிட்டனில் பறக்க ஆரம்பித்துவிட்டன. தற்போது பிரிஸ்டல் கம்பெனியாரால் பத்துபேர்கள் உட்கார்ந்து செல்லக்கூடிய ஹெல்லிகாப்டர் செய்யப்பட்டு வருகிறது. வெஸ்ட்லண்ட்ஸ் கம்பெனியார் பிரிட்டிஷ் ஆல்விஸ் எஞ்ஜின் நிறுவப்பட்ட ஹெல்லிகாப்டர் ஒன்றை தயாரித்து வருகின்றனர்.

சிக்கன வீடுகள்

இந்தியவில் “ரெடிமேட்” வீடுகள் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் மதிப்பில் அடங்குமாறு சிக்கனமாகச் செய்வதற்கான தொழிற்சாலை டில்லியில் நிறுவப்பட்டு வருகிறது. இவ்வாண்டு மத்தியில வேலை துவங்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நாளைக்கு சுமார் நூறு வீடுகள் வீதம் இத்தொழிற்சாலையில் தயாரிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையிலும், கல்கத்தாவிலும் இத்தகைய வீடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை விரைவில் நிறுவப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் வெற்றிகரமாக வேலை செய்யுமானால் இந்திய மக்களின் வீட்டுப் பஞ்சம் ஒழிந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இந்த வேலையைஇந்திய அரசாங்கத்துக்காக செய்து கொடுக்கும் பணியை வெளி நாட்டு பிரபல தொழில் ஸ்தாபனம் ஒன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது. வெளி நாடுகளில் இந்த ரெடிமேட் வீடுகள் தயாரிப்பு இருக்கும் முனைப்பையும், இவ்வீடு பற்றிய சில ரஸமான தகவல்களையும் இவ்விதழ் முதல் பக்கக் கட்டுரையில் காணலாம்.

துறையூர் டி. மு. கோர்ட்

O. S. No. 77/49 I. A. 218/49

நல்லம்மாள் —வாதி

சிவசாமி அய்யர் வகையரு —பிரதிவாதிகள்

ஷை நெம்பரில் வாதி தனக்காகவும், தன்னைப்போல் உள்ள 5-ம் பிரதிவாதியின் Creditor களுக்கு representative ஆகவும் O. S. 206/1946-ல் E. A. 38ㅇ/47 நம்பரில் ஏற்பட்ட Summary order ஐ ரத்துசெய்ய தாவா செய்து 26—3—1949 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறதென்பதை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

துறையூர் 9-3-49 } M. S. நாராயணய்யர் வக்கீல்.

In the Court of the Subordinate Judge at Tiruchirapalli.

O. P. No. 124 of 1948.

(In the matter of the debts of A. K. Sesha Iyer deceased)

Minor Krishnamurthi by guardian and next friend mother Thayarammal and another —Petitioners

Notice is hereby given that on 5—11—48an application was made to this court by the petitioners above for the grant to them of a certificate under Part X of the Succession Certificate Act, 1889, with respect to the debts and securities of late A. K. Sesha Iyer who died on 20—6—1948 and that the 15th day of March 1949 has been fixed for the hearing thereof, when you are at liberty to appear and oppose the same.

(Sd). R. SESHADRI, Advocate.

10-3-49 Tiruchirapalli.

TRADE MARK
"குவாலிடி காப்பி"
திருச்சி.

டி. ஆர். குருசாமி

சிலை சொல்லாத சேதி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இனி நான் சொல்லப்போகும் விஷயத்தைப்பற்றி எண்ணுகையில் என் உணர்ச்சி வசப்பட்ட மனத்தைச் சற்று தயார் செய்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது...கேளுங்கள். இனி மேல்தான் முக்கியம். பொறுமை என்பது மனிதனுக்கு எந்தக்கற்பனையை எல்லாம் உண்டாக்குகிறது..ஹூம். அமலனின் திட்டம் தீவிரமானது என்றாலும் அதனால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. "தன்வினை தன்னைச்சுடும்" ஆஹா! எவ்வளவு அழகான பழமொழி.

அமலனின் திட்டப்படி எல்லாம் நடந்தன. வழக்கம்போல யோகன், ஊருக்குள் போய் வரும்போது ஊருக்கும் படுகைக்கும் இடையே உள்ள அமலனின் தோட்டத்தில் அவன் மகள் கமலி நின்றாள். யோகனின் தலையைக்கண்டதும் கமலி முன்னேற்பாட்டின்படி மரத்திலிருந்து தொங்கிய கயிற்றால் கழுத்தை இறுக்கிக்கொண்டு கத்தினாள்.

அதைக்கண்ட உண்மைக்கலைஞனாகிய யோகனின் உள்ளம் பதறிப்போனதில் ஆச்சரியமில்லை. உணர்ச்சி வசப்பட்டுவிட்டார் யோகன். 'என்ன செய்கிறோம்' என அறியாமல் வேலியை ஒரேயடியாகத்தாண்டி ஓடினார். இவர் போவதற்குள் அவள் மூர்ச்சையாகும் அளவு வரை நிலைமை மீறிவிட்டது. யோகன் அந்தப்பெண்ணைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு அவள் கழுத்தின் சுருக்கை அகற்றினதுடன் அந்தக் கயிற்றையும் பிடித்திழுத்து அறுத்து எறிந்துவிட்டார்.

கள்ளி கமலி மயக்கத்திலேயே கிடந்தாள். கலைஞன் அவளை உணர்விற்குக் கொணரப்பாடுபட்டான். இதற்குள் வந்துவிட்டான் அமலன். அவன மட்டும் வரவில்லை. சாட்சிக்கு இரு பிரமுகருடன்தான். அதன் பிறகு என்னவேண்டும்? எண்ணியபடி நடந்துவிட்டது. கலைஞன் மடியில் கள்ளி சோர்ந்து படுத்திருக்கிறாள். கலைஞன் அவளுக்குஉபசாரம்செய்கிறான். அதுபோதாதா, அவனது வஞ்சக எண்ணம் நிறைவேற.

"எத்தனை நாளாகடா இந்தக் கள்ளக்காதல்!!" என்ற கடுஞ்சொல்.

"இல்லையே! அமலா! என்னையும் அப்படி எண்ணிவிட்டாயா?"

"உன்னை ... ஹஹ்ஹஹ்ஹா : நீ...நீமட்டும் என்ன? முற்றும் துறந்த முனியோ? இளமையின் துடிப்பு. வலிவுள்ள உடல். யாருமற்ற சூழல். ஊருக்கு எட்டாத இடம். தனிமை. தருணி தனியாக அகப்பட்டாள். ...இந்த சந்தர்ப்பம் போதாதா இளைஞனை வெறியனாக்க...உன் போன்ற கலைஞனாகியஎன்னிடம் உன் கைவரிசையைக்காட்டிவிட்டாயே? இப்போது கெட்டவள் என் மகளாடா? உனக்கென்ன? உன் வெறி.... அதுநாசமாய்ப்போக..." இப்படியாக அமலன் அடுக்கிவிட்டான் நாடகத்தின் நடிகன்போல

பிறகு என்ன? கிராமத்து நாட்டாண்மைக்காரன்— அவன் அமலனால் ஆட்டப்படும் பதுமைதானே— தீர்ப்பளித்தான்: யோகனை நாட்டைவிட்டு ஓடச்சொல்லி நாட்டார் நம்பினர் நாட்டாண்மையின் நச்சுத் தீர்ப்பை. தண்டனை மீறினால்... கல்லடி....இது முன்கால நியதி ...வழககம். மீறினான் கலைஞன்.

தன்கையால் கல்லை அடித்து அதைக் கடவுளாக்கிக் காசினியின் முன்னிலையில் சொல்லாத கலையாக்கி: அமரனாக எண்ணிய கலைஞனுக்குக் கல்லடி! தனது ஊக்கத்தால் முன்னேறி தன் திறனைக்காட்டிப் புகழ்பெற்ற புனிதனுக்கு கல்லடி! வாழ்க்கையைக் கலைக்காகவே அர்ப்பணித்து காலமெல்லாம் கலை வளர்க்கப் பாடுபட்ட என் கலைஞனுக்குக்கல்லடி! காலம் அளித்த பரிசு அது. ஊரைவிட்டு ஓடிவிட்டான் யோகன் அப்போது எனக்கு கையிருந்தால்: இந்தக் காலத்தைச் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கி இருப்பேன் ... என்னத்தை செய்ய. என் துடிப்பு என்னைக் கல்லாக்கிவிட்டது

அதன் பின்னர் நான் யோகனைக் காணவில்லை. எங்கு போனாரோ எப்படி யானாரோ? எனக்குத்தெரியாது: ஒருவேளை அவர்வந்து இங்கு தேடிக்கூட இருக்கலாம்: நான்தான் இங்கு இல்லையே? என்னையும் விடவில்லை அமலனின் கோபம். என்னை தூக்கி காவேரியில் போட்டுவிட்டது.

கிடந்தேன், கிடந்தேன். காவேரியின் அணைப்பில் கற்பகோடிகாலம் கிடந்தேன். எப்படிவெளிவந்தேன் என்று உமக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? கேளுங்கள்! ஒரு நாள் யாரோ ஒருவர் குளிக்கையில் அவர் கால் என்மேல்பட்டது. துணி துவைக்கக்கல் கிடைத்தது என்று எண்ணி அவர் என்னைப் புரட்டிக் கரையில் போட்டார் நான கல்லாக இல்லை பாதி அடித்த சிலை. அதன் பின்னர் என்னைப்பற்றி எத்தனையோபேர் கனவு கண்டார்கள். அதன் பலனாக இந்த மரத்தடியில் இடம் பெற்றேன். வாரமொரு முறை பூசை எனக்கு உண்டு. வருடம் ஒரு திருவிழாகூட உண்டு. எனக்கு இது பிடித்தால்தானே? என்யோகன் இல்லாது நான் எப்படிக்கொண்டாடப்பட்டு என்னபயன்! நிற்கிறேன். இன்னம் எத்தனை காலம் கல்லாக நிற்கவேண்டுமோ? ஹூம். "பெருமூச்சுடன் சிலை கதையை நிறுத்திவிட்டது. சற்று நேரம் பொறுத்துப்பார்த்தேன் சிலை மீண்டும் தொடருமோவென்று. ஆனால்மௌனம் தொடர்ந்தது. நான் ஆரம்பித்தேன். 'அமலனுக்கும் யோகனுக்கும், விரோதம் வரக்காரணம்?" என்று இது தெரிந்துவிட்டால் யோகனின் கதை பூர்த்தி யடைந்துவிடும். ஆனால், நான் கேட்டதற்கு பதிலில்லை.

"ஏ சிலையே! என்னகாரணம் சொல்லு!"

... ...

மீண்டும், மீண்டுங் கத்தினேன். .... உரக்க... .... இனனம்... ....உரக்க......

'பட படபட'வென்று பலத்த சத்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தேன். நான் கனவில் கத்தியதைக்கேட்டு மரத்திலிருந்த காகம் ஒன்று சிறகடித்துப் பறந்திருக்கும்போலும்— சூரியன் மேற்குநோக்கி நகர்ந்துகொண்டிருந்தான். வானத் துண்டுகள் வரிசையாக நின்றன. ஆலம் விழுதுகள் அணிவகுத்து நின்றன. நான் மேடையின் மேலேதானிருந்தேன்

எதிரே சிலை.

முறுக்கிய மீசையும், முடியில் கிரீடமும், கையில் கதையுமாய் நான் வீடு நோக்கிப் புறப்பட்டேன். போன பொழுது புதுமையுடன், கழிந்ததை எண்ணிப் புளித்துப்போனேன். ஆனாலும்... ஒரு குறை .... ஒரு சந்தேகம். "சிலை சொல்லாத அந்தச்சேதி என்ன"வென்று. கதை கனவிலானாலும நனவு போன்ற ஒரு எண்ணம். என்ன செய்வது? சிலை சொன்ன கதையில் சொல்லாத பாகத்தை எண்ணி சொக்கிப்போய் விட்டால்... அடுத்து தொடரக்காத்திருக்கும் என் இயந்திர வாழ்க்கை? அது என்ன ஆவது?

ஃ ஃ ஃ

நான் நகரத்துக்கு வந்து சேர்ந்தவுடன் என் நினைவு சிலை சொன்ன கதையையே சுற்ற முடியுமா? அதை மறந்துவிட எத்தனையோ நிகழ்வுகள்தான் நகரத்தில்காத்திருக்கின்றனவே. அதில் சிக்கித் தத்தளிக்கும் மனிதன் சிலையைப்பற்றி அது சொல்லாத சேதியைப்பற்றி சிந்திக்க முடியுமா? பெரும்பாலும் அந்த நிகழ்வை மறந்தேவிட்டேன். என்றாவது ஒருநாள் நினைவுக்கு வரும் அந்தக்கனவு.

சற்றுநேரம் அதைப்பற்றியே மனது சிந்தித்தது: "அது என்ன சேதியாக இருக்கும்?" என்று. குழம்பி முடிவில் ஒரு சேதியை கற்பனையால் தேர்ந்தெடுக்கும். அதற்குள் வாழ்க்கையின் தொந்தம் தொடரும். சரிதான். கனவின் நினைவு கானலாகிவிடும். கடமை காத்திருக்கக் கனவைப் பற்றி சிந்திக்க முடியுமா? ஆகக்கூடி அந்த நினைவே தேய்பிறைச் சந்திரனைப்போலத் தேய்ந்து மறைய ஆரம்பித்தது.

அந்த நிலையில் ஒரு நாள் ஆபீஸ் அலுவலின் காரணமாகக் காட்டுப்புத்தூர் போய்வர வேண்டிவந்தது. போன காரியம் காலதாமதமாகிவிட்டதால் கடைசி 'பஸ்'ஸில் வந்து கொண்டிருந்தேன்.

பஸ் பறந்துகொண்டிருந்தது அதைத் தொடர்ந்து — இல்லை

(அடுத்த பக்கம் பார்க்க.)

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

சிலை சொல்லாத சேதி

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதையும் மூந்திக்கொண்டு—என் நினைவு பறந்துகொண்டிருந்தது. எதோ ஒரு பழகின இடத்திற்கு மறுபடி வரும்போது அந்த இடத்தில் நம் சம்பந்தப்பட்ட சங்கதிகள் சங்கிலிபோல சிந்தையில் உருவாகும் வழக்கம் மனிதப் பண்பில் கலந்ததுதானே? அதுபோலவே என் மனமும் என்றோ சொன்ன சிலையின கதையைப் பற்றி அது சொல்லாமல் விட்ட சேதியைப் பற்றியும் ஆயிரமாவது முறையாக சிந்தை செய்ய வாரம்பித்தது. ஏனென்றால் பஸ் அப்போது நத்தத்தின் சூழலைத் தாண்டிக் கொண்டிருந்தது.

ஓடிக்கொண்டேயிருந்த பஸ் நின்றுவிட்டது, 'டபார்' என்ற சப்தத்துடன். 'சரி டயர் பஞ்சராகிவிட்டது. இன்று ஊர் போனது போலத்தான்.' என்று எல்லோரும் ஏக காலத்தில் கூவினேம். அது அப்படித்தான் ஆனது. என்னதான் 'ஸ்பேர் வீல்' இருந்தாலும் பஞ்சரானதைக் கழற்றிவிட்டு புதிது போடவும் அவகாசம் ஆகுமல்லவா? எல்லோரும் பஸ்ஸை விட்டு இறங்கிவிட்டோம். ட்ரைவரும் கம்பியில் துணிசுற்றி எண்ணெயில் நனைத்து பந்தமொன்றைத் தயார் செய்துகொண்டு வேலைக்குப் புறப்பட்டார்.

'அவரது வேலை முடியும் வரையில் சும்மா நிற்பானேன்' என நான் சற்று நடை பழக எண்ணினேன். என்னை யாரும் பின் தொடரவில்லை. பின்தொடர்வதை நானும் விரும்பவில்லை. வந்திருந்தாலும் தடுத்து இருக்க மாட்டேன். பழகின இடத்தில் பாதம் படுவதும் ஒரு பூரிப்பைத் தருகிறதல்லவா?

நான் நீண்டதூரம் நடக்கவில்லை. ஏனென்றால் வசதியாக அமர சாலையின் ஓரத்தில் ஒரு விநாயகர் கோவில் இருந்தது. அதற்குள் எரியும் விளக்கு 'இதோ அணைந்துவிடுவேன்' என பயமுறுத்திக்கொண்டு இருந்தது. எனக்கும் 'பஸ் புறப்பட்டுவிட்டால்' என்ற சந்தேகத்தின் காரணமாக வெளித் திண்ணையிலேயே உட்கார்ந்தேன். பத்துகஜ தூரத்தில் பஸ்ஸைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார் டிரைவர். அதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். எங்கும் இருட்டு. இருந்தாலும் சற்று நேரமாகவே இருளில் இருந்ததால் சூழல் புலனானது. உட்கார்ந்திருந்தேன். மறுபடியும் எண்ணவலையம் மன முனையில் சுழன்றது. விநாயகரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சாலையோடு யாரோ ஒரு வழிப்போக்கர் வந்தார். சுருண்டிருந்த தலைமயிர், கட்டுமஸ்தான உடல். தோளின் ஒருபுறம் சரிந்திருந்தது அங்கவஸ்திரம். களையுள்ள முகம், பித்தன்போன்ற பார்வை. ஆழ்ந்த பெருமூச்சும் அடிக்கடி வந்துகொண்டிருந்தது. வந்தவர் என் பக்கத்தில், திண்ணையில் அமர்ந்தார். சற்று நேரம் பேசவில்லை- நானும் மௌனத்தைக் கலைக்கவில்லை. கண்கள் பஸ்ஸைப் பார்த்துக்கொண்டிடிருந்தன.

"தாங்கள், இந்த பஸ்ஸில் வந்தவரோ" என்றூர் வழிப்போக்கர்.

"ஆம்" என்றேன்.

"பஸ் சரியாக நீண்ட நேரமாகுமோ? அப்படித்தான் தோன்றுகிறது"

"ஆமாம்" என்றுமட்டும் சொன்னேன். மனத்தில் சிலை சொல்லாத சேதியைக் கலைக்க எண்ணமில்லை. பேசாமலிருந்தேன். அந்த மனிதன் விடவில்லை.

"தங்கள் ஊர் ஏதோ?"

"திருச்சி, அலுவலாக வந்தேன். ஆபத்து வந்துவிட்டது. எப்போது போகப் போகிறேனே! பார்த்துக்கொள்வோம்" என்றேன்.

"திருச்சியே சொந்த ஊரோ"

"இல்லை நான் பிறந்தது இதோ இந்தநத்தம்தான். ஆனல் இன்று எனக்கு இங்கு தொடர்பில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்வரையில் தொடர்புண்டு."

"ஓஹோ! அதுதான் இருளில் இங்கு வர தைரியமிருக்கிறது. இடம் பழகாவிட்டால் இருளில் பயம் வற்படுமே. அதுவும் இந்தப் படுகையில்...பேய்....பிசாசுகள் வேறு உண்டு இங்கே......"

"எனக்குப் பேய்களில நம்பிக்கை கிடையாது. அப்படியிருந்தாலல்லவா பேய்களைப் பற்றி பயப்படுவதற்கு?" என்று என் சூரத்தனத்தை வெளியிட்டேன்.

"நீங்கள் என்னவோ சொல்கிறீர்கள். நானும் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தேன். அன்றுவரையில். ஆனல் அன்று நேராக ஒரு பேயைக் கண்டு அதனுடைய சோகக் கதையைக் கேட்டவுடன் எனக்கும் நம்பிக்கை வர ஆரம்பித்தது. பாவம்! அதன் சோகக்கதை மிகவும் கன்ருவி. அதைக்கேட்கும் சுவாரஸ்யத்தில் நான் பயத்தையும் மறந்துவிட்டேன்." என்ருர்.

"என்ன அய்யா! பேயாவது கதை சொல்லவாவது" என்று சொன்னேனே ஒழிய 'ஏன் சொல்லியிருக்காது?' என்றது உள் மனம். "சிலை கதை சொல்ல அதைக் கேட்டு அதன் முடிவைப் பற்றி எண்ணும் அனுபவம் உள்ள உனக்கு பேய்சொன்ன கதையில் நம்பிக்கை ஏன் உண்டாகவில்லை" என்று தொடர்ந்தது உள்மனம்.

"ஒருவேளை இவரும் நம்மைப் போல கனவில் கண்டிருக்கலாம் பேயை.. ஒருவேளை... அந்தப் பேய்...." சரி கேட்போம் என்று உத்தரவிட்டதுமனம் இதற்குள்.

"பேய்தானய்யா கதை சொல்லிற்று. வேண்டுமானாலும் அது சொன்ன கதையை அப்படியே சொல்லுகிறேன். அத்துடன என்னுடைய விஷயமும் தொடர்பு உண்டு. அதனல்தான் என் மனம் பாதிக்கிறது. உங்களுக்கு பிரியமானல்......" என்ருர்.

"எனக்கு பிரியமில்லாமல் என்ன? பஸ்புறப்படும்வரையில் வெறும் நேரம் போவதைவிட கதை கேட்டால் நல்லதுதானே. சொல்லுங்கள்" என்றேன்.

"கேளுங்கள் அந்தப் பேயை நான் காவேரிக் கரைப் படுகையில் உள்ள சிலையருகில் சந்தித்தேன். கனவில்தான். ஆனலும் அது இன்று நினைத்தாலும் நனவுபோலத் தோன்றுகிறது" என்ருர்.

'சரி மனிதர் நம் வழி வருகிருர் இந்தக்கதையால் நமக்குச் சிலை சொல்லாத சேதி பற்றித் தெரிந்துகொள்ளலாம்" என்ற உறுதியுடன் இருந்தேன். அவர் தொடர்ந்தார்.

"கதையை மட்டும் சொல்லுகிறேன் அந்தப் பேய் சொன்னபடியே! கேளுங்கள்........" என்ருர்.

(அடுத்த இதழில் முடியும்)

✷

108 வது ஸ்ரீ ஐயப்பன் நாடகம்

மதுரையில் முகாம் செய்திருந்த நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரின் 108 வது ஸ்ரீ ஐயப்பன் நாடகத்திற்கு, ஷை நாடகத்தில் உண்மைக் காக்ஷியின் ஒரு பாத்திரமாக விளங்கும் திருவாங்கூர் சட்டசபைத் தலைவராகவும், நகரசபைத் தலைவராகவுமிருந்த ஆலப்புழை ஸ்ரீ. கே. எ கிருஷ்ணய்யங்கார் குமாரர் ஸ்ரீ ராஜகோபால அய்யங்கார், சபரி மலையில் ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு பூஜை செய்து வரும் ஸ்ரீ கிருஷ்ணன் நம்பூதரி, மற்றும் பல ஐயப்பன்மார்களும் விஜயம் செய்து, மேடைமீதேறி, தம் தம் அனுபவங்களை விளக்கிப் பேசி நவாபைப் பெரிதும் பாராட்டினர்.

பச்சையப்பா நன்கொடைகள்

சென்னை பச்சையப்பா நன்கொடைகள் 106-வது ஆண்டு விழா சென்ற நான்காம் தேதியன்று சென்னை பச்சையப்பன் கலலூரியில் நடைபெற்றது. அப்போது சென்னை கவர்னர் மாட்சிமை தங்கிய பவநகர் மகாராஜா தலைமை வகித்தார்.

சர். முத்தையா செட்டியாரவர்கள் இனிய சொற்பொழிவாற்றினர். இந்த நிதியின் மூலகர்த்தாவைப் பற்றியும், இதைக் கொண்டு புரியப்பட்ட பணிகளின் வளர்ச்சி பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டு, மாணவ மாணவிகளுக்கு அறிய போதனையும் செய்தார்.

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு,
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனல் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்
போலி மருந்துகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

ரேகை சாத்திரம்

விதி ரேகை

"சிவதாஸன்"

ஏழு ரேகைகளில் வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பது விதி ரேகை. சனி பகவானின் அருள் சனி ரேகை அல்லது விதி ரேகையாக அமைகிறது. விதி ரேகை அமையாவிடில் வாழ்வில் தொழில் துறையில் முன்னேற்றம் இல்லை என்பது. உலகத்தில் மக்கள் பரம ஏழைகளாக இருப்பதையும், பெரும் செல்வந்தர்களாக இருப்பதையும் விதி ரேகை நன்கு காட்டுகிறது. எல்லோரும் சுகமாக இருக்கலாம் என்று சமுதாயப் புரட்சிகள் செய்தாலும், ஒருவர் வாழ்க்கையில் கஷ்டப்படுவதுமாதிரி மற்றொருவர் கஷ்டப்படுவதில்லை. இதையும் விதி ரேகை காட்டுகிறது. விதி ரேகை தேக அமைப்பையும், வியாதிகளையும் காட்டுவதில்லை என்ருலும விதி ரேகை நன்கு அமையாத இடத்தில் வேறு வித கஷ்டங்களால் மனிதர்கள் பாதிக்கப்படுகிருர்கள். எவ்வளவு மக்கள் பெரிய செல்வந்தர்களாக இருந்தாலும், அளவுக்கு மிஞ்சின சிலவுகளினுலும், கோர்ட் விவகாரங்களினுலும் மகத்தான கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இதையும் விதி ரேகை காட்டுகிறது. விதி ரேகை மெல்லியதாக இருக்கவேண்டும். விதி ரேகை ஆழமாகவும், அகலமாகவும், தடித்தும் காணப்படுவது வாழ்க்கையில் சீர் கேடான நிலமையைக் காட்டுகிறது.

விதி ரேகை காணப்படாமல் இருந்தால் உலகத்தில் வாழ்க்கை இராது என்று அவசரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாது. கிரகங்களின் வலிமையால், மற்றவர்களின் தயவால் வாழ்க்கை நடப்பதையும் காணலாம். இந்த விதி ரேகை கையின் பல பாகங்களிலிருந்து உற்பத்தியாகி சனி மேட்டை அடைகிறது. விதி ரேகை ஆயுள் ரேகையின் இறுதி பக்கத்திலிருந்து உற்பத்தியாகி சனி மேடு வரை செல்லவேண்டும். மெல்லியதாகவும், அதிக வளைவுகள், தடைகள் இல்லாமல் அமையவேண்டும். இதுவே, வாழ்க்கை படிப்படியாக உயர்வதையும், சிரமமில்லாமல் வாழ்வார்கள் என்பதையும் காட்டுகிறது. விதி ரேகை சுக்ர மேட்டிலிருந்து உற்பத்தியாகி ஆயுள் ரேகையைத் தாண்டி சனி மேடு வரை செல்வதுண்டு. இது உறவினர்களின் உதவியால் வாழ்க்கை நடந்துவரும் என்பது. விதி ரேகை சந்திர மேட்டிலிருந்து உற்பத்தியாகி செல்வதுண்டு. ஸ்த்ரீகளின் ஆதரவால் வாழ்க்கை நடைபெறும்; மனைவியால் சொத்து முதலியவைகள் வந்து வாழ்க்கை நடைபெறலாம். விதி ரேகை ஆரம்பத்தில் விசாலமாக இருந்தால் மிக்க கஷ்டப்பட்ட பிறகு வேலை கிடைக்கும் என்று அறிக. சிலர் கையில் விதி ரேகை, புத்தி ரேகையிலிருந்து உற்பத்தியாவதுண்டு. விதி ரேகை ஆரம்பமாகும் வரை வாழ்க்கை அவ்வளவு சுகமாக இருக்காது. மகத்தான கஷ்டங்களை அனுபவிப்பார்கள். பிறரின் தயவினல் வாழ்க்கை அதுகாறும் நடந்துவரும். விதி ரேகையில் தீவு காணப்பட்டால் அந்தக்கால அளவில் தொழிலில் தகருர்களை கொடுக்கும். உத்தியோகத்தில் மேல் அதிகாரியின் கோபத்திற்கு உள் ஆகி விடுவார்கள். விதி ரேகை நின்றுவிட்ட கால அளவில் தொழிலும் நின்றுவிடும் என்பது பொது விதி. இதை கிரக வலிமையாலும், மற்ற ரேகைகளின் அமைப்பினுலும் நிச்சயிக்கவேண்டும்.

விதி ரேகையில் குறுக்கிட்ட ரேகைகள் சாதாரணமாக பலர் கையில் பார்க்கலாம். உங்கள் கையைப் பாருங்கள். விதி ரேகையை குறுக்கிடும் ரேகைகள் அந்த வயதில் தொழிலில் தடைகள் ஏற்படும் என்பது. விதி ரேகை நடுவில் துண்டுபடுமாரினுல் அந்த காலத்தில் உத்தியோகத்தை இழக்க நேரிடும். துண்டுபட்ட இடத்தில் சிலருக்கு சதுரமான குறியினுல் இணைக்கப்பட்டு மறுபடியும் விதி ரேகை சனி மேட்டை அடையுமானுல், அந்த வயதில் தொழிலில் பெரும் ஆபத்தைக் கொடுத்துவிடும். ஆனுலும் உத்தியோகத்தை இழக்கமாட்டார்கள். உலகில் பல மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் பல தொழிலில் ஈடுபடுகிருர்கள். உதாரணமாக, சர்க்கார் இலாகாவில் கொஞ்சகாலம், உத்தியோகம் வகிப்பார்கள். பிறகு அதை விட்டு, கம்பெனிகளில் உத்தியோகம் செய்வார்கள். பிறகு அதையும் விட்டு கொஞ்சகாலம், வேலை இலலாதிருக்க நேரிடும்; இம்மாதிரி ஒரே ஸ்திரமில்லாத வேலை செய்பவர்கள் பல மக்கள். பல காரணங்களால் தங்கள் வேலையை இழந்து, மறுபடியும், முற்றும் மாறுதலான இடத்தில் வேலை ஒப்புக்கொள்கிருர்கள். இதை விதி ரேகை காட்டுகிறது. அதாவது, விதி ரேகை, கொஞ்சதூரம் சென்று நின்றுவிடும். பிறகு வேறு விதி ரேகை ஆரம்பமாகி, சிறிதுதூரம் சென்று மறைந்துவிடும். இம்மாதிரியாக விதி ரேகையானது துண்டு துண்டாக அமைகிறது.

விதி ரேகை, துண்டுபட்டு, அதே கால அளவில் மற்றொரு ரேகை தொடர்ந்து சென்று, துண்டுபட்ட இடத்தில் இரண்டு ரேகைகளையும் சிறு ரேகை பக்கவாட்டில் சேர்க்குமானுல், உத்தியோகத்தில் இடம் மாற்றம், ஆனுல் வேலை அதுவே என்பதை காட்டுகிறது. இதுவும் பலர் கையில் பார்க்கலாம். விதி ரேகை பாதி கையில் நின்று, ஆயுள் ரேகையிலிருந்து வேறு ரேகை சனி மேட்டை அடையுமானுல் இது முதல் ரேகை நின்ற காலத்திலிருந்து விதி ரேகையாக பிரகாசிக்கிறது. இப்படி உற்பத்தியாகும் இரண்டாவது விதி ரேகை குரு மேட்டை அடையுமானுல் சிறந்த செல்வாக்கைத் தரும்.

அரசாங்கமும் தொழிற் கல்வியும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயரிருக்கிறது. இதைவிட அதிகப் பெருமையை அடைந்திருக்கிறது பீளமேடு கலாசாலை, என்று குறிப்பிட்டார் நாயுடு.

இவ்வாண்டு பரீட்சைகள் சம்பந்தமாக நாயுடு அவர்கள் சுட்டிக் காட்டிய சில குறைகள் கவனிக்க வேண்டியவை.

"நேற்றுவரை எனக்கு ஒரு நம்பிக்கை இருந்தது — இவ்வாண்டு பரீட்சைகளில் எல்லாத் துறைகளிலும் இக் கலாசாலையின் எல்லா மாணவர்களும் மாகாணத்திலேயே முதன்மை பெறுவார்கள் என்று. ஆனுல் இது சிதறிப்போய் விட்டது. 'பிராக்டிகல்' பரீட்சைக்கு இக் கலாசாலை மாணவர்கள் சென்னைக்குப் போக வேண்டுமாம்.

"இக் கலாசாலையில் மிகவும் நவீனமான, உடனடியாக நாட்டின் வருங்காலத் தொழில் அபிவிருத்திக்கு உபயோகிக்கத் தக்க கருவிகளையும், இயந்திரங்களையும் கொண்டே பயிற்சியளிக்கப் படுகிறது. வேறு எந்தக் கலாசாலையிலும் இத்தனை நூதனமான யந்திரங்கள் கிடையாது என்றே திண்ணமாகக் கூறிவிடலாம். மேலும் இங்கு பழைய கருவிகள் அறவே கிடையாது. இந்த நிலையில் இக்கலாசாலையின் மாணவர்கள் சென்னைக்குப் போய் பத்தாம் பசலி யந்திரங்களுக்கு முன் என்ன செய்வார்கள்? தாங்கள் முன் பின் பார்க்காத யந்திரங்களில் இவர்களைப் பரிசோதனை செய்வது மகத்தான பாபமல்லவா? மேலும் இத்தனை பேருக்கும் பிரயாணச் செலவும், தொந்திரவும் ஏற்படுகிறது. அரசாங்கம் ஒரு சில பரிசோதனையாளர்களை இங்கு ஏன் அனுப்பக்கூடாது?"

அரசாங்கத்துக்கு இப்படி சில முக்கிய விஷயங்களை எடுத்துக் காட்டியதோடு மாணவருக்கு ரஸமான போதனையும் செய்திருக்கிருர் நாயுடு. கல்வி பயிலும் காலத்தில் மாணவருக்கு இருக்கவேண்டிய அடக்கம், கட்டுப்பாடு, ஊக்கம், இவை பற்றி நாயுடுவின் கருத்துகள் பண்டைய குருக்களின் பண்பு பொருந்தியிருக்கிறது.

வாழ்க்கையில் முதல் 25 ஆண்டுகளைக் கல்வி கற்பதிலும், அடுத்த 25 ஆண்டுகளைப் பொருள் ஈட்டுவதிலும், கடைசி 25 ஆண்டுகளை சரியான முறையில் இப் பொருளைச் செலவிடுவதிலும் கழிக்கத் திட்டமிட்டிருப்பதாகக் கூறிய நாயுடு அவர்கள் மனிதனிடம் சிறந்த அனுதாபமும், அவனது நலனில் மகத்தான அக்கரையும் கொண்டிருக்கிருர் என்று விளக்கத் தேவையில்லை.

EMBROIDERY MACHINE

புதிதாக கண்டுபிடித்த இந்த மிஷின் துணிகள் மீது சுலபமாக நூல் பாட்டர்ன்கள், புஷ்பங்கள் ஸீனரி ஆகியவைகளை போடுகிறது. ஸ்திரீகளுக்கும் சிறுமிகளுக்கும் மிகவும் உபயோகமானது நான்கு ஊசிகளுடன் மெஷின் விலை ரூ 3-8-0 தபால்சிலவு அணு 12. கடிதங்களை ஆங்கிலத்தில் மட்டும் எழுதவும்.

DEEN BROTHERS. ALIGAHRH3

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

ருதுகத்தை நிறுத்தியது.

(வி. பி.க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE. F.D S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd. MADRAS

Regd. No. M 3398 SHIVAJI 13—3—49 Estd. 1935

ஆஸ்பத்திரி வேலையில் இயந்திர "நர்ஸ்"



ஆஸ்பத்திரிகளிலுள்ள நர்ஸ்கள் வேலைகளை அதிகம் குறைக்கக்கூடிய புதிய சாதனமொன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கழுத்து முதல் கால்வரை பிளாஸ்டிக் சிகித்சைபெறும் பருமனான நோயாளிகளை கட்டுகள் தளர்ந்து விடாமல் இலகுவாக தூக்குவதற்கு இச்சாதனம் பெரிதும் பயன் படும். இயந்திர 'நர்ஸ்' என அழைக்கப்படும் இச்சாதனத்தை மிஸ்டர் ஸேஸில் கலலன் என்ற ஆங்கில மெக்கானிக்தான் கண்டுபிடித்தார். இச்சாதனத்தை உபயோகிப்பதால் பருமனான நோயாளிகளைத் தூக்கவோ அல்லது மற்றொரு படுக்கைக்கு மாற்றவோ ஒரே ஒரு நர்ஸ்தான் தேவைப்படுகிறது.

பிரிஸ்டலுக்கருகிலுள்ள வின்போர்ட் ஆஸ்பத்திரியில் இந்த இயந்திர 'நர்ஸ்' தற்போது உபயோகத்திலிருந்து வருகிறது. இந்த ஆஸ்பத்திரியின் பிரதம வைத்திய அதிகாரி இயந்திர நர்ஸ் பற்றி குறிப்பிடுகையில், "அநேக வருடங்களாக நாம் ஆவலுடன் காத்திருந்த அதிசய சாதனம்" என வர்ணித்துள்ளார். "முதுகெலும்பு நோயால் கஷ்டப்படும் ஒரு நோயாளியைத்தூக்க இதுவரை நான்கு அல்லது ஐந்து நர்ஸுகள் தேவைப்பட்டனர்; அப்படியிருக்கும் நோயாளிக்கு ஆபத்து ஏற்படக்கூடிய பயமும் இருந்து வந்தது; ஆனால் தற்போது இச்சாதனத்தை உபயோகித்து கைப்பிடியை திருப்புவதன்மூலம் ஒரே நர்ஸ் நோயாளியை தூக்கவோ அல்லது வேறொரு படுக்கைக்கு மாற்றவோ முடிகிறது; இவ்வேலையில் இயந்திர 'நர்ஸ்' தவறி நடந்துகொள்ளமுடியாது' எனவும் அவ்வதிகாரி ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

கழுத்துமுதல் பாதம்வரை பிளாஸ்டிக் சிகித்சை பெறும் 168 ராத்தல் நிறையுள்ள க்ஷயரோக நோயாளி ஒருவரை 'ட்யூடி'யிலிருக்கும் நர்ஸின் உதவியுடன் ஒரு இயந்திர 'நர்ஸ்' கவனித்து வருவதை மேலே பிரசுரிக்கப்பட்டிருக்கும் படம் விளக்குகிறது.

நாளைய உலகம்:

காற்றாடி இயந்திரங்களிலிருந்து மின்சார உற்பத்தி

பழங்கால 'விண்ட்மில்' என்ற காற்றாடி இயந்திரங்களை தற்கால தொழில்களின் தேவைக்குப் பயன்படுத்த முடியுமா என்ற பிரச்னையைப் பற்றி பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்துவருவதாக லண்டனிலிருந்து வெளியாகும் 'நியூஸ் கிரானிகள்' பத்திரிகை எழுதுகிறது. அவ்வாராய்ச்சிகளுக்கு வெற்றிகிடைத்தால் பிரிட்டனில் கிராமாந்திர அமைதியின் சின்னமாக விளங்கிவரும் காற்றாடி இயந்திரங்களும் நாட்டின் அதிக உற்பத்தி இயக்கத்திற்கு உதவி செய்யமுடியும்.

இவ்விஞ்ஞானிகள் சுமார் ஆறுமாதகாலம் ஏகாந்தமான ஆர்க்லாந்து தீவுகளில் தங்கி 600-அடி உயரமுள்ள மலை உச்சி யொன்றில் காற்றின் வேகம், திசை முதலியவைகளைப்பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வந்தனர். அங்கு காற்று சில சமயங்களில் மணிக்கு 90 மைல் வேகத்தில் வீசுகிறது.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் கடற்கரைகளில் காற்றின் வேகம், திசை முதலிய குறிப்புகளை சேகரிப்பதற்கு நிலையங்கள் அமைப்பது சம்பந்தமாக அவ்விஞ்ஞானிகள் சர்வே நடத்தி வருகின்றனர். போதுமான குறிப்புகள் சேகரிக்கப்பட்டபின் பிரம்மாண்டமான தற்கால காற்றாடி இயந்திரமொன்று அமைப்பதற்கான வேலை ஆரம்பிக்கப்படும். இந்த இயந்திரம் சுமார் 2000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யலாமென மதிப்பிடப்படுகிறது. இக்காற்றாடி இயந்திரம் தயாரிக்க சுமார் ஒரு வருடகாலம் பிடிக்கலாம்.

மின்சாரத்தின் மூலம் தூங்கச் செய்யலாம்!

பிரிட்டிஷ் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி.

பிரிஸ்டல் நிபுணர் பரீட்சை.

சத்திர சிகிச்சை செய்வதற்கு முன் நோயாளிகளுக்கு 'குளோரோபாம்' அல்லது கொகய்ன் போன்ற மயக்கமருந்து கொடுப்பதென்ற வழக்கம் பழங்கால முறையாக மாறிவிடக்கூடிய நாள் வெகு தூரத்திலில்லை. மின்சாரசக்தியின் மூலம் செயற்கையாக தூக்கம் ஏறிவிடச் செய்வதற்கானதொரு முறையை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுபிடித்திருப்பதே இதற்குக் காரணம். பிரிஸ்டலிலுள்ள பர்டன் ரசாயனசாலையில் நிபுணர்கள் இம்முறையை விலங்குகள் மீது வெற்றிகரமாக பரீட்சை செய்திருக்கின்றனர். இம்முறையில் உபயோகிக்கப்படும் மின்சார விசைகள் மனித மூளை தூக்கம் ஏற்படுவதற்காக இயற்கையாக உற்பத்தி செய்யும் விசைகளைப் போலவே இருக்கின்றன.

இம்முறையைப்பற்றி சோதனைகள் நடத்திவரும் ஆராய்ச்சி கோஷ்டியின் தலைவரான டாக்டர் வால்டர் இப் புதுமுறையை தன் உடம்பிலேயே வெற்றிகரமாக, பரீட்சை செய்துள்ளார்.

அவர் ஒரு பேட்டியில் கூறியதாவது: "மின்சார விசைகள் என் மீது தாக்கியவுடன் நான் கும்பகர்ணன்போல் ஒரேயடியாக தூங்கிவிடவில்லை; என்றாலும் என் உடம்பை கிள்ளின பொழுதும், ஊசியால் குத்தின பொழுதும் எனக்கு கொஞ்சங்கூட வலியே இருக்கவில்லை. ஒரு நபர் தூங்க வேண்டுமென்று நினைத்தால் உடனே மூளை ஒருவித மின்சார விசைகளை செயற்கையாக சிருஷ்டிக்கிறது. அதேபோல் சிருஷ்டிக்கத்தான் நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம்."

டாக்டர் வால்டர் தனது சரீரத்திலேயே பரீட்சை செய்யும்போது பூரண மயக்கம் ஏற்படவில்லை. என்றாலும் ஆராய்ச்சிகள் ஒழுங்கான வழியில்தான் நடைபெற்று வருகின்றன என்பதை அது நிரூபித்துள்ளது. இம்முறையை கையாளுவதிலுள்ள பெரிய நன்மை என்னவெனில் ஆபரேஷன் முடிந்தவுடன் நோயாளியை உடனடியாக எழுப்பி விடலாம். இதற்கு மின்சார விசை உற்பத்திசெய்யும் சாதனத்திலுள்ள 'ஸ்விட்சை' சர்ஜன் 'ஆப்' செய்யவேண்டிய ஒரு வேலைதான். மயக்க மருந்துகள் சில நோயாளிகளுக்கு ஏற்படுத்தும் குமட்டல் முதலியவை இம்முறையில் சிறிதேனும் காணப்படுவதில்லை. சிறிய ஆபரேஷன்கள், பல் ஆபரேஷன் முதலியவைகளுக்கு இம் மின்சார தூக்க முறையை அபாயமின்றி கையாள முடியுமென்பதை சமீபத்திய சோதனைகள் நன்கு நிரூபித்துள்ளன.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).